
மொழிக்கு மொழி தித்திக்கும

மூவர் தமிழ் மாலை

மாலை—14



உரையாசிரியர்:

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
(சங்கரானடிமை)

உ

விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

மாலை — 14

உரையாசிரியர் :

சிவபுராண ஞானபூஜகர், சாஸ்த்ர பிரசார பூஷணம், சிவபுராணக் காவலர், சிவபுராணச் சக்கரவர்த்தி

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

(சங்கரன் அடிமை)



ருத்ரோத்காரி ஆண்டு
விநாயக சதுர்த்தி நன்னாள் வெளியீடு
10—9—1983

பிரசுரம் :

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை-600 033.

 1983 [விலை ரூ. 3-00

உ

சைவ சமயாசாரியார்

நால்வர் துதி



திருஞான சம்பந்தர் திருநாவுக் கரசர் சுந்தர மூர்த்திகள் மாணிக்க வாசகர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் – முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே.

திருஞானசம்பந்தர்



புண்ணிய முதல், புனைமணி அரைஞாணொடு
போதும் கண்ணிறை கதிர்,
கலைவளர்மதி, கவின்மேவும் பண்ணியல்
கதி, பருவமதொரு மூவருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர் அருள்பெற்ற

திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்



ஸமர்ப்பணம்

ஓம் சிபிவிஷ்டாய நம:

சிபிவிஷ்ட! என்பது சிவபெருமானுடைய அருச்சனைக்குரிய 108 திருநாமங்களில் 14 வது ஆகும். பசுக்களாகிய ஜீவர்களுக்குத் தலைவர், அனைத்து உயிர்களிடத்தும் அந்தர்யாமியாக இருப்பவர் என்பன போன்ற பொருள்களைத் தரும் ஓம் சிபிவிஷ்டாய நம: என்ற இந்தப் பதினான்காவது திவ்யத் திருநாம மந்திரத்தால் அருச்சித்து ஞானதிதமிழாகரரின் சீகாழிப் பதிகங்கள் சில அடங்கிய இந்தப் பதினான்காவது ஞானத் தமிழ் மாலையினைத் 'தனிமுதலாம் பரன்' என்று சுருதிகள் பாடும் நமது பெருமானும் சிவபிரானுக்கு அணிவிக்கும் நற்பேற்றினை முந்தைய பிறவிகளில் செய்த புண்ணியப் பயனால் பெறுகின்றேன்.

இங்ஙனம்

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா

உரையாசிரியர்

சிவம்

5-2

உ
சிவமயம்
ஸ்ரீமஹாதேவஜயம்

உரையாசிரியர் பணிவுரை.

திருச்சிற்றம்பலம்

அரும்பின அன்பில்லை அர்ச்சனை இல்லை அரன்நெறியே
விரும்பின மாந்தர்க்கு மெய்ப்பணி செய்கிலம் பொய்க்கமைந்த
இரும்பன உள்ளத்தி னேற்கெங்ங னேவந்து நேர்பட்டதால்
கரும்பன நீள்வயல் சூழ்காழி நாதன் கழலடியே.

திருச்சிற்றம்பலம்

—ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி-24.
(நம்பியாண்டார் நம்பிகள் அருளியது: 11-ம் திருமுறை)

சைவத் தெய்வத்திருமுறைகள் நமக்குக் கிடைக்கக் காரணமாயிருந்த திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற நம்பியாண்டர் நம்பிகள் தமக்குத் திருஞான சம்பந்தரின் திருவருள் எப்படியோ கிடைத்ததை வியந்து பாடியது மேற்படி திருப்பாடல். காழிநாதனும் திருஞான சம்பந்தரின் திருவடிகளில் பக்தி ஏற்பட நான் செய்த தவம், தான் யாதோ? என்னிடம் அன்பில்லை, அர்ச்சனை இல்லை இவை இல்லாமற் போயிடினும் அரனடியார்களுக்காவது தொண்டு செய்தேனா? ஒன்றுமில்லையே இத்தகைய இரும்பு போன்ற கடின சித்தமுடையவன் நான். பொய்யான உலக வாழ்க்கையில் அமைந்தவன் நான். அத்தகையேனுக்கு சீகாழி நாதனும் திருஞானசம்பந்தரின் திருவடிகள் எங்ஙனம் வந்து தரிசனமளித்தன? என்பது மேற்படி பாடல் நமக்குக் கூறும் செய்தியாகும்.

திருவருள்நெறி சார்ந்த அருளனுபவம் பெற்ற பேரருட் பெருந்தகையும் சைவத்திருமுறை வரலாற்றில் அழியாப் புகழ் பெற்ற அருளாளருமான நம்பியாண்டார் நம்பிகள் முத்தமிழ் விரகனும், ஆறதேறும் சடையான் அருள் அவனி யர்க்கு மேவ வீறதேறும் தமிழால் பதிகப் பெருவழி அமைத்துக் காட்டியருளியவருமான கவுணியர் குலமணி யாம் திருஞானசம்பந்தப் பெருமானை ஆறு அருள் நூல் களால் போற்றிப் புகழ்ந்த பெருமையுடையவர். அத்தகைய பேரருளாளரே மேற்கண்டவாறு கூறியுள்ளார் எனின் நம் நிலையை என்னென்று கூறுவது?

'அவனருளாலே அவன்தாள் வணங்கி, என்ற அருள் வாக்கின்படி திருஞானசம்பந்தர் திருவடிகளைச் சிரமேற் கொண்டு உரையெழுதல் என்ற வியாஜத்தினால் அப்பெரு மானின் பதிகங்களைக் கும்பிடும் முயற்சியில் சீகாழியின் பன்னிரு திருப்பெயர்களில் சீகாழி என்ற பெயரிலேயே பாடி யருளிய பதிகங்களில் பாடிய காலமும் வரலாறும் தெரியாத பதிகங்களை மட்டும் இந்த மாலையிலும் பின்வரும் மாலை களிலும் கொடுப்போம். வரலாறு தெரிந்த பதிகங்கள் உரிய காலங்களில் பிரசுரிக்கப்படும்.

அன்பர்கள் தொடர்ந்து மாலைகளைப்பெற்று பதிகப்பெரு வழியில் சென்று இறைவனதின்னருளைப்பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
சங்கரனடிமை

சென்னை-33
15-8-1983

ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா,
பதிப்பாசிரியர்— உரையாசிரியர்

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்



மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை—14

திருஞானசம்பந்தர் அருளியவை

(தொடர்ச்சி)

சீகாழி—1

பதிக வரலாறு : சீகாழித்தலம் பன்னிரண்டு திருப்பெயர்கள் பெற்றது என்பதை முன்னர் குறிப்பிட்டுள்ளோம். சீகாழி என்ற பெயரிலேயே பாடியருளிய பதிகங்களில் வரலாறோ காலமோ தெரியாத சில பதிகங்கள் ஒன்றன் பின்னொன்றாக இந்த மாலையிலும், பின்னர் வரும் மாலைகளிலும் கொடுக்கப்படும். காளிதன் என்ற பாம்பும் நடனத்தில் தோல்வியடைந்த காளியும் பூசித்துப் பேறு பெற்றதால் சீகாழி என்ற பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

பண்: தக்கராகம்] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

அடலே றமருங் கொடியண்ணல்
மடலார் குழலா ளொடுமன்னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வார் அவர்தூ நெறியாரே. 1.

பதிகப்பொழிப்புரை : 1. வலிமை பொருந்திய இடபம் அமர்ந்த கொடியையுடைய அண்ணலாகிய சிவபெருமானை, மலருடன் கூடிய கூந்தலையுடைய உமாதேவியாரோடு நிலை பெற்று வீற்றிருப்பதான, கடல் புடைசூழ்ந்த சீகாழிப் பதியைத் தொடர்பவர்களாகிய அந்த அடியவர்களே தூய் மையான நெறியில் செல்பவர் ஆவார்கள்.

அமர்தல் — பொருந்துதல், இருத்தல், விரும்புதல் முதலிய பொருள்களில் வரும்.

ஏறு அமருங் கொடியண்ணல் — வ்ருஷபத்வஜன் என்னும் ஸம்ஸ்க்ருதப் பெயரின் தூய தமிழாக்கம் மடல் - பூ. தொடர்வார் — தொடர்பு கொள்பவர், அதாவது சீகாழிப் பதியுடன் மன மொழி மெய் இவைகளால் தொடர்பு கொள் பவர். சீகாழியைத் தியானித்தல் மனதின் தொடர்பு, சீகாழியையும் அதில் கோயில் கொண்டுள்ள இறைவரையும் துதித்தல் மொழியால் தொடர்பு, சீகாழி செல்லுதல் அங்கு இறைவர் திருக்கோயிலை வலம் வந்து இறைவர் திருமுன்பு தரிசனம் செய்தல் முதலியன உடலாற் கொள்ளும் தொடர்பு, ஆக இம்மூவகையிலும் விடாது சீகாழியைத் தொடர்பவர்களாகிய அவர்களே அடியார்கள், அவர்களது நெறியே பிறர் பின்பற்ற வேண்டிய நெறி, ஆதலவே தூய் மையான நெறி என்று பிள்ளையார் இத்திருப்பாடல் மூலம் உலகத்தவர்க்கு அறிவுறுத்தியருளினார் என்க.

திரையார் புனல்சூ டியசெல்வன்
வரையார் மகளோ டுமகிழ்ந்தான்
கரையார் புனல்சூழ் தருகாழி
நிரையார் மலர்தூ வுமினின்றே. 2.

2. அலைகள் பொருந்திய கங்கையைத்தலையில் அணிந்த செல்வனும், மலைமகளோடு மகிழ்ந்தவனுமாகிய சிவ பிரானது, கரைபொருந்திய நீர் சூழ்ந்த சீகாழிப்பதியினை வரிசையான மலர்களைத்தூவி வணங்குங்கள்.

முன் திருப்பாடலில் தொடர்வார் என்றருளிச் செய்ததை, எவ்வகைகளில் தொடர்பு கொள்வது என்று விளக்கம் செய்தருளுவது போல இப்பாடலும் பின்வரும் பாடல்களும் அமைந்துள்ளமை கண்டு கொள்க. மலர் தூவுதல் — பூக்களால் அர்ச்சித்தல்.

இடியார் குரலே றுடையெந்தை
துடியார் இடையா ளொடுதுன்னுங்
கடியார் பொழில்சூழ் தருகாழி
அடியார் அறியார் அவலம்மே. 3.

3. இடியையொத்த குரலுடைய எருதினை ஊர்தியாக உடைய எந்தையாராகிய சிவபிரான், உடுக்கை போன்ற இடையையுடைய உமாதேவியாரோடு பொருந்தியிருக்கும், மணம் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த சீகாழியை வணங்கும் அடியார்கள் அவலம் என்பதையே அறியமாட்டார்கள்.

துடி — உடுக்கை; துன்னுதல் — நெருங்குதல், இங்குப் பொருந்தியிருத்தல் எனக் கொள்ளப்பட்டது. கடி — மணம்; அவலம் — துயர், வறுமை; சோர்வு, வலியின்மை முதலிய துன்பங்கள்.

ஒளியார் விடமுண் டவொருவன்
அளியார் குழல்மங் கையொடன்பாய்க்
களியார் பொழில்சூழ் தருகாழி
எளிதாம் அதுகண் டவரின்பே. 4.

4 ஒளியோடு கூடிய விஷத்தினை உண்டருளிய ஒப்பற்றவனாகிய சிவபிரான், வண்டுகள் நிறைந்த கூந்தலை உடைய மங்கையாம் உமாதேவியாரோடு அன்புடன்

மகிழ்ந்திருக்கும் பொழில்கள் சூழ்ந்த சீகாழியைக் கண்டவர்க்கு இன்பம் நிறைதல் எளிதாகும்.

ஒளி — விஷத்தின் நீல ஒளி, திருமால் உள்ளிட்ட மற்ற தேவர்கள் விஷத்தினைப் பார்ப்பதற்கும் 'இயலாதவர் ஆயினர். அத்தகைய விஷத்தை இறைவன் எளிதில் உண்டருளிமை குறிக்க ஒளியார் விடம் எனக் கூறியருளியதாகக் கொள்க. ஆதிசங்கரர் தாமருளிய சிவானந்தலஹரி என்னும் தோத்திர நூலில் "உக்ரமான ஜ்வாலைகளுடன் கூடியதும் தேவர்களனைவருக்கும் பயத்தினைத் தருவதுமான விஷம் எங்ஙனம் தங்களால் பார்க்கப்பட்டது?'' என்று கூறியருளியதும் இங்கு ஒப்பு நோக்குதற்குரியது ("ஜ்வாலோக்ர; ஸகல அமராதிபயத: க்ஷ்வேல: கதம் வா த்வயா த்ருஷ்ட: ....'' சிவானந்தலஹரீ—32)

இன்பம் — இம்மை மறுமை ஆகிய இருவகை இன்பங்களையும் குறிக்கும்.

பனியார் மலரார் தருபாதன்
முனிதான் உமையோ டுமுயங்கிக்
கனியார் பொழில்சூழ் தருகாழி
இனிதாம் அதுகண் டவர்டே. 5.

5. தாமரைமலர் போன்ற திருவடிகளையுடையவரும், முனியுமாகிய சிவபிரான் உமாதேவியாரோடு தழுவி (மகிழ்ந்து) இருக்குமிடமாகிய கனிகள் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த சீகாழிப்பதியைத் தரிசித்தவரது பெருமை இனியதாம்.

பனியார்மலர் — பாதன் அதாவது பாதத்தினையுடையவர் என்ற சொல்லுக்கு விசேஷணமாய் வருதலின் தாமரை மலர் என்று பொருள் உரைக்கப்பட்டது, பாதத்துக்கு தாமரை உவமையாகலின்; முனி — யோகி, தவத்தோன்,

முயங்குதல் — தழுவுதல். உமையோடு முயங்கியும் இறைவர் யோகியேயாவர் என்பதைக் குறிக்க முனி என்றருளிச் செய்தனர் பிள்ளையார். சேக்கிழார் பெருமான் இறைவனைப் பெருமுனி என்று போற்றியுள்ளார். வேதம் ருத்ரோ மஹரிஷி: என்று துதிக்கும்.

ஈடு — பெருமை, இனிதாம் என்றது எளிதில் எய்துவர் என்பதாம் அல்லது பெருமையால் மகிழ்ச்சியடைவர் என்றும் கொள்ளலாம்.

கொலையார் தருகூற் றமுதைத்து
மலையான் மகளோ டுமகிழ்ந்தான்
கலையார் தொழுதேத் தியகாழி
தலையால் தொழுவார் தலையாரே. 6

6. கொல்லுந் தொழில் பொருந்திய இயமனை உதைத்து மலையரசன் மகளான உமாதேவியாரோடு மகிழ்ந்து வீற்றிருக்கும் சிவபிரானது, கலைஞானமுடையவர் தொழுது வணங்கும் சீகாழிப்பதியை தலைவணங்கித் தொழுபவர்கள் மக்கள் அனைவரினும் தலையாயவர் அதாவது உயர்ந்தவர்கள் ஆவர்.

திருவார் சிலையால் எயிலெய்து
உருவார் உமையோ டுடனானான்
கருவார் பொழில்சூழ் தருகாழி
மருவா தவர்வான் மருவாரே. 7

7. அழகிய பொன்மலையாகிய வில்லால் மும்மதில்களையும் எய்து அழித்து, அழகுடைய உமாதேவியாருடன் ஒன்றி உறைபவனாகிய சிவபிரானது, கருமை நிறைந்த சோலைகள் சூழ்ந்த சீகாழிப்பதியை அடையாதவர் வானுலகம் அடைய மாட்டார்கள்.

கரு ஆர் பொழில் — சோலைகளின் அடர்த்தியால் இருள் நிறைந்திருக்குமாகையால் கருமை பொருந்திய சோலைகள் எனக் கூறியருளியதாகக் கொள்க.

மருவாதவர் — அடையாதவர், அதாவது சீகாழிப் பதியைச் சென்றடைந்து மலர்தூவி, கோபுர தரிசனம், ஆலய தரிசனம் செய்து அங்கு இறைவனை வணங்காதவர்.

வான் — பொதுவாக வானுலகம் அதாவது தேவர் உலகம் என்று பொருள்படுமிச்சொல் திருமுறைகளில் பெரும்பான்மை இறைவரது சிவலோகத்தைக் குறிக்கும். எனவே சீகாழியைச்சென்று அடையாதவர் சிவலோகமடையாது ஸ்வர்க்க நரகங்களிலேயே உழல்வர் என்று கூறியதாம்.

சீகாழியைத் தொடர்தலின் சிறப்பு இப்பாடலில் எதிர்மறையில் வலியுறுத்தப்பட்டதாகக் கொள்க.

அரக்கன் வலியொல் கவடர்த்து
வரைக்கு மகளோ டுமகிழ்ந்தான்
சுரக்கும் புனல்சூழ் தருகாழி
நிரக்கும் மலர்தூ வுநினைந்தே. 8

8. இராவணனது வலிமை அழியும்படி நெருக்கி (இராவணன் செயலால் உண்டான பயத்தை நீக்கி) மலை மகளோடு மகிழ்ந்திருந்தவனாகிய சிவபிரானது, மேன் மேலும் பெருகும் நீர் சூழ்ந்த சீகாழிப்பதியை ஒழுங்கான மலர்கள் கொண்டு இறைவனை நினைந்து மலர்தூவி வழிபடுங்கள்.

அரக்கன் — இராவணன். அரக்கன் மலையெடுக்க அதனால் உமையாள் எய்திய அச்சத்தைப் போக்கியது குறிக்க வரைக்குமகளோடு மகிழ்ந்தான் என்று கூறி அருளினார்.

திருத்தலத்தை மலர்தூவி வழிபடும்போது அத்தலத்து இறைவரை தியானித்து வழிபடல் வேண்டும் என்பதை அறிவுறுத்த மலர்தூவு நினைந்தே என்று அருளிச்செய்ததாகக் கொள்க.

இருவர்க் கெரியா கிநிமிர்ந்தான்
உருவிற் பெரியா ளொடுசேருங்
கருநற் பரவை கமழ்காழி
மருவப் பிரியும் வினைமாய்ந்தே. 9

9. பிரம விட்டுணுக்களாகிய இருவர்க்கு (அவர் அடி முடியறியாதவாறு) எரிப்பிழம்பாய் நிமிர்ந்தவனாகிய சிவ பிரான் பெரியநாயகிப் பிராட்டியாருடன் சேர்ந்து வீற்றி ருக்கின்ற, கரிய நல்ல கடல் சூழ்ந்த சீகாழிப்பதியைச் சென்று அடைய நம்முடைய வினைகள் யாவும் கெட்டு நம்மை விட்டு அகலும்.

உருவிற் பெரியாள் — பெரியநாயகி. சீகாழித் திருக் கோயிலில் திருத்தோணிச் சிகரத்தில் இருக்கும் அம்மையின் திருப்பெயர்.

கருநற்பரவை — அழகிய கருங்கடல்.

வினை பிரியும் அல்லது மாயும் என்று மாத்திரமே கூறினால் போதுமெனினும், உறுதியின் பொருட்டு (EMPHASIS) மாய்ந்து பிரியும் எனக்கூறியருளியதாகக் கொள்க.

சமண்சாக் கியர்தாம் அலர்தூற்ற
அமைந்தான் உமையோ டுடனன்பாய்க்
கமழ்ந்தார் பொழில்சூழ் தருகாழி
சுமந்தார் மலர்தூ வுதல்தொண்டே. 10

10. சமணர், சாக்கியர் ஆகிய புறச்சமயிகள் பழிச் சொற்களைக் கூற, உமாதேவியாருடன் ஒருங்கே அன்புடன் அமர்ந்திருக்கும் பெருமானது, மணங்கமழ்தலையுடைய பொழில்கள் சூழ்ந்த சீகாழிப்பதியினைத் தம்மனத்துள் வைத்துத் தாங்கியவர்கள் மலர் தூவி வழிபடுதல் சிறந்த தொண்டு ஆகும்.

அலர்தூற்ற — பழிச் சொற்களைக் கூற (இறைவர் உமை யொருபாகனாய் இருத்தல், பேயோடாடுதல், நடமிடுதல்

முதலிய அருட்செயல்களை இழித்துக் கூறுவது புறச்சமயிகளது வழக்கம்)

உமையோடு அன்பாய் அமர்ந்தான் — சீகாழிப்பதியில் திருத்தோணிச்சிகரத்தில் தோணியப்பர் பெரியநாயகிப் பிராட்டியாருடன் காட்சி கொடுக்கும் திருக்கோலம் கண்களுக்குப் பெருவிருந்தாகும்.

காழி சுமந்தார் — சீகாழிப்பதியையே தமது மனதில் எக்காலத்தும் வைத்தல் அதாவது இடைவிடாது தியானித்தலைச் செய்பவர்கள்.

நலமா கியஞா னசம்பந்தன்
கலமார் கடல்சூழ் தருகாழி
நிலையா கநினைந் தவர்பாடல்
வலரா னவர்வான் அடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11: நன்மையே வடிவாகிய திருஞானசம்பந்தன், மரக்கலங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த சீகாழிப்பதியையே தமது நிலைத்த இடமாக நினைந்து கோயில் கொண்டுள்ள சிவபிரானது தோத்திரமாயமைந்த இந்தப் பாடலில் வல்லவர்களாகிய அடியவர்கள் வானுலகம் அடைவார்கள்.

நலம் — நன்மை, சிவனருளை உயிர்கட்குப் பெற்றுத் தரும் நன்மை. நிலையாக நினைந்தவர் — சீகாழியைத் தமது நிலைத்த இடமாக நினைத்த பெருமான். வான் — ஏழாவது திருப்பாடல் உரைக்குறிப்பில் கூறியது கண்டு கொள்க.

சிவம்

சிவமயம்
ஸ்ரீமஹாதேவஜயம்

சீகாழி—2

பண் : குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

நல்லார் தீமேவுந் தொழிலார் நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார் சுடற்பொற் கழலேத்த
வில்லாற் புரஞ்செற்ருன் மேவும் பதிபோலுங்
கல்லார் மதில்சூழ்ந்த காழிந் நகர்தானே. 1

பதிகப்பொழிப்புரை: 1. நல்லவர்களும், யாகத்தீயை விரும்பும் தொழிலையுடையவர்களும், நான்கு வேதங்களாகிய சொற்களையுடையவர்களும், இறைவனிடம் அன்பு கொண்டவர்களும் (சீகாழி அந்தணர்கள்) ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பொன் போன்ற அழகிய திருவடிகளைத் துதித்து வணங்க, (மேருமலையாகிய) வில்லால் முப்புரங்களையும் எய்து அழித்த சிவபிரான் விரும்பி எழுந்தருளி இருக்கும் இடமாவது மலையை ஒத்த மதில் சூழ்ந்த சீகாழி நகரமாகும்.

நல்லார் — பிறர்க்கு எந்நாளும் நன்மையே செய்பவர்கள்.

தீமேவுந் தொழிலார் — அந்தணர்க்குரிய தொழில்கள் ஆறனுள் வேட்டல் (வேள்வி செய்தல்) ஒன்ருகலின் அத்தொழிலையுடையவரை தொழிலார் எனக் கூறியருளியதாகக் கொள்க.

சொல்லார் — சொற்களை என்றும் நாவிலே உடையவர்கள் வேதங்கள் ஆசானிடமிருந்து செவி வழியாகக் கேட்டு மனனம் செய்யப்படுதலின் அவை ஒருநாளும் நினைவிலிருந்து நீங்கா. சொல்ல வேண்டும் என்று எண்ணிய மாத்திரத்தில் சிறிதும் தடையின்றி நாவானது வேதங்களை ஓதும். எனவே நால் வேதஞ் சொல்லார் என்று கூறியருளினர்.

கேண்மை. — உறவு, அன்பு, நட்பு என்பன போன்ற பொருள்கள் உள்ள இச்சொல் இங்கு இறைவனிடம் அடியார்களுக்கு உரிய அன்பு அதாவது பக்தியைக் குறிக்கும். அதை உடையவர் கேண்மையார் எனப்பட்டார். இறைவன் பதி, உயிர் பசு என்ற உறவினைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

கல் — மலை, கல்லார் மதில் — மலையை ஒத்த மதில். (கருங்கற்களால் கட்டப்பட்ட மதில்கள் என்றும் கொள்ளலாம்)

துளிவண் தேன்பாயும் இதழி தூமத்தந்
தெளிவெண் திங்கள்மா சுணநீர் திகழ்சென்னி
ஒளிவெண் தலைமாலை உகந்தான் ஊர்போலுங்
களிவண் டியாழ்செய்யுங் காழிந் நகர்தானே. 2.

2. வளமுடைய தேன்துளி பாய்தலையுடைய கொன்றை, தூய ஊமத்தம், தெளிவுடைய வெண்மையான பிறைச் சந்திரன், பாம்பு, கங்கை இவைகள் திகழ்கின்ற தலையினில் ஒளியுடைய வெண்மையான தலைமாலை தரித்தலை விரும்புபவனாகிய சிவபிரானது ஊராவது (தேன்குடித்தலால்) மயக்கமுள்ள வண்டுகள் யாழின் ஒலி போல் இரீங்காரம் செய்கின்ற சீகாழி நகரமாகும்.

துளி வண் தேன் — வண் தேன் துளி எனமாற்றி பொருள் உரைக்கப்பட்டது இதழி — கொன்றை;

தூமத்தம் — தூ ஊமத்தம்; மாசுணம் — பாம்பு;

களி — மகிழ்ச்சி, மயக்கம், கர்வம் முதலிய பொருள்கள்.

ஆலக் கோலத்தின் நஞ்சுண் டமுதத்தைச்
சாலத் தேவர்க்கீந் தளித்தான் தன்மையால்
பாலற் காய்நன்றும் பரிந்து பாதத்தால்
காலற் காய்ந்தானூர் காழிந் நகர்தானே. 3·7.

(3—7) ஆலகாலமென்னும் கொடிய விஷத்தைத் தான் உண்டு தேவர்களுக்கு மிகுதியாக அமுதத்தைஅளித்தவனும் தனது அருள் புரியும் தன்மையால் பாலனுக்காக நன்றாய்ப் பரிந்து பாதத்தினால் காலனைக் கோபித்து உதைத்தவனும் ஆகிய சிவபிரானது ஊர் சீகாழி நகரமாகும்.

தன்மை — இயற்கைக் குணம், பெருமை. பரிந்து — அன்பு கொண்டு; காய்தல் — கோபித்தல்; பாதத்தால் காய் தல் — கோபித்துப் பாதத்தினால் உதைத்துத் தண்டித்தலைக் குறித்தது.

இரவில் திரிவோர்கட் கிறைதோள் இணைபத்தும்
நிரவிக் கரவாளை நேர்ந்தான் இடம்போலும்
பரவித் திரிவோர்க்கும் பால்நீ றணிவோர்க்கும்
கரவில் தடக்கையார் காழிந் நகர்தானே. 8.

8. அரக்கர்களுக்கரசனாகிய இராவணனது இருபது தோள்களையும் நிரவுதல் செய்து (பின்னர் அவனுக்கே) ஒரு சிறந்த கைவாளையும் அருளிச் செய்தவனாகிய சிவபிரானுடைய இடமாவது. எப்பொழுதும் இறைவனைத் துதித்துக் கொண்டே இருப்போர்க்கும், பால் போன்ற வெண்மையான திருநீறு அணிபவர்களுக்கும் உலோபம் இன்றி வாரி வழங்கும் கைகளை உடையவர்கள் வாழுகின்ற சீகாழி நகராகும்.

இரவில் திரிவோர் — 'நிசாசரர்' என்ற வடமொழிச் சொல்லின் தூய தமிழ் வடிவம், அரக்கர்கள் பகலில் உறங்கி இரவில் திரிபவர்களாவர்.

இணை பத்து — இருபது; நிரவுதல் — மேடும் பள்ளமுமாயிருக்கும் நிலத்தைச் சமனாக்குவதற்கு நிரவுதல் என்று பெயர். இங்கு இராவணனது தோள் வலிமைச்செருக்கால் உயர்ந்து இருந்தமையைத் தம் கால் விரலால் அடர்த்து நசுங்கச் செய்ததை நிரவுதல் எனக் குறிப்பிட்டதாகக் கொள்க.

பரவுதல் — துதித்தல்; திரிதல் — எங்குச் சென்றாலும் நின்றாலும், நடந்தாலும் இறைவனைத் துதித்துக்கொண்டே இருத்தல்.

கரவு — உலோபம், வஞ்சனை, களவு, ஒளித்தல் முதலிய பொருள்கள். தடக்கை — வாரி வாரி வழங்கும் பெருமையுடைய கைகள்.

சீகாழி வாழும் மக்கள் சிவனடியார்களுக்கு வாரி வழங்கும் திறத்தினைக் குறித்தது இத்திருப்பாடல். அவ்வூர் மக்கள் திறமே இங்ஙனமாயின் இறைவனது அருள் வழங்கும் தன்மை எத்தகையதாம் என்பதை உய்த்துணர வைத்துள்ளது கண்டு கொள்க.

மாலும் பிரமனும் அறியா மாட்சியான்
தோலும் புரிநூலுந் துதைந்த வரைமார்பன்
ஏலும் பதிபோலும் இரந்தோர்க் கெந்நாளுங்
காலம் பகராதார் காழிந் நகர்தானே. 9.

9. திருமாலும் நான்முகனும் (அடிமுடி) அறியாத பெருமையுடையவனும், யானைத் தோலும் முப்புரிநூலும் அணிந்த மலைபோன்ற மார்பினையுடையவனுமான சிவபிரான் பொருந்தி இருக்கும் பதியாவது, யாசிப்பவர்களுக்கு இது காலமல்ல, இது காலமல்ல என்று சொல்லாது எப்பொழுதும் கொடுத்தலைச் செய்பவர்கள் வாழுகின்ற சீகாழிப்பதியாகும்.

மாட்சி — பெருமை; துதைதல் — செறிதல், நிறைந்திருத்தல்; ஏறுதல் — பொருந்துதல்.

காலம் பகர்தல் — இரப்போர்க்கு உடனே கொடாது இன்று சமயமல்ல நாளை வா, பின்னை வா என்று கால தாமதஞ் செய்தல். கொடாமல் இருக்க இதனை ஓர் உபாயமாகக் கொள்ளுதல்.

சீகாழி மக்களே காலம் பகரார் எனின் இறைவனார் அருள் செய்யும் தன்மைக்குக் கூறவும் வேண்டுமோ?

தங்கை இடவுண்பார் தாழ்சீ வரத்தார்கள்
பெங்கை உணராதே பேணித் தொழுமின்கள்
மங்கை ஒருபாகம் மகிழ்ந்தான் மலர்சென்னிக்
கங்கை தரித்தானூர் காழிந் நகர்தானே. 10.

10. தமது கைகளில் உணவைப் பிறர் இடத் தாம் உண்ணும் வழக்கத்தையுடைய சமணர்களும், தாழ்ந்த சீவர உடை அணிதலை மேற்கொண்ட பௌத்தர்களும் கடைப் பிடிக்கும் தீயொழுக்கத்தினைச் சிறிதும் சிந்தியாது, உமாதேவியாரை ஒரு பக்கத்தே கொண்டவனும், மலர்கள் சூடிய தலையில் கங்கையைத் தரித்தவனுமாகிய சிவபிரானது ஊராகிய சீகாழியை இடைவிடாது தியானித்துத் தொழுது வணங்குங்கள்.

தங்கையிட உண்பார் — நின்று கொண்டே கையில் உணவை ஏற்று உண்பது சமணர் இயல்பாகும். இலை முதலியவற்றை நிலத்தில் இடின் சிற்றுயிர்கள் பற்றி இறக்க ஏதுவாகும் என்பதுபற்றி நின்று கொண்டே கையினில் உணவை ஏற்று உண்பர் என்க. அப்பரடிகளின் 6ம் திரு முறை 3வது பதிகம் 7, 8வது திருப்பாடல்களில் 'கையி லுண்டு' என்றும் 'கறிவிரவு நெய்சோறு கையிலுண்டு' என்றும் அருளப்பட்டது கண்டு கொள்க. இன்னும் சமணர்கள் உணவு உண்ணும் முறைகளைப்பற்றி அப்பரடிகளின் திருப் பாடல்களில் விரிவாகக் காணலாம்.

தாழ்சீவரத்தார் — பாதம் வரையில் தாழ்ந்து இருக்கும் சீவரவுடை தரித்த பவுத்தர்கள். சீவரம் — ஒருவகைப் பழுப்பு நிறம் ஊட்டப்பெற்ற ஆடை. இது பற்றி முன் வந்த இடங்களில் உரைக்கப்பட்டவையும் கொள்க.

பெங்கை — தவமென்று அவம் செய்யும் தீய ஒழுக்கம். இனி பெங்கு என்பதற்கு ஒருவகைக் கள் என்ற பொருள்

உளதாகையால் கள் போன்று மயக்கந்தரும் சொற்கள் என்றும் கொள்ளலாம்.

வாசங் கமழ்காழி மதிசெஞ் சடைவைத்த
ஈசன் நகர்தன்னை இணையில் சம்பந்தன்
பேசுந் தமிழ்வல்லோர் பெருநீர் உலகத்துப்
பாசந் தனையற்றுப் பழியில் புகழாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பிறைச்சந்திரனைச் சடையில் வைத்த ஈசனது நகராகிய மணம் பரந்து வீசுகின்ற சீகாழிப்பதியைப் பற்றித் தனக்கு ஒப்பில்லாத சம்பந்தன் துதித்துப் பாடிய இத்தமிழ்த் திருப்பதிகத்தை வல்லவர்கள் கடல் சூழ்ந்த இந்த நிலவுலகத்துப் பாசங்கள் நீங்கி, பழியற்ற புகழ்கள் உடையவராய் இனிது வாழ்வர்.

கமழ்தல் — பரந்து வீசுதல்.

இணையில் என்பதை ஈசனுக்காக்கி இணையில் ஈசன் என்றோ அல்லது நகருக்காக்கி ஈசன் இணையில் நகர் காழி என்றோ கொள்ளினும் அமையும்.

பேசுதல் — இங்குத் துதித்துப்பாடுதல் என்ற பொருளில் வந்ததாகக் கொள்க. தமிழ் — தமிழ்ப்பாடல்கள்.

வல்லவர் — ஓதவும், பொருள் உணரவும் வல்லவர்கள்.

பெருநீர் — கடல்.

சீகாழிப்பதியின் தெய்வ நலம் பற்றித் திருஞான சம்பந்தர் பாடிய இத்தமிழ் மாலையினைப் பொருளுணர்ந்து பாடவல்லவர்கள் கடல்சூழ்ந்த இந்நிலவுலகத்தில் பாசங்களினின்றும் விடுபட்டு பழியற்றவர்களாய்ப் புகழுடன் வாழ்வார்கள் என்று இத்திருப்பதிகப் பயன் கூறியது இத்திருப்பாடல்.

குறிப்பு: இத்திருப்பதிகத்தின் 4, 5, 6, 7வது திருப்பாடல்கள் மறைந்து போயின.

சிவம்.

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

சீகாழி – 3

பண் : குறிஞ்சி] திருச்சிற்றம்பலம் [1-ம் திருமுறை

உரவார்கலையின் கவிதைப்புலவர்க் கொருநாளுங்
கரவாவண்கைக் கற்றவர்சேருங் கலிக்காழி
அரவார்அரையா அவுணர்புரமூன் றெரிசெய்த
சரவாவென்பார் தத்துவஞானத் தலையாரே. 1

பதிகப்பொழிப்புரை: *1.* ஞானம் நிறைந்த கலைகளிலும் கவிதைகளிலும் வல்ல புலவர்களுக்கு ஒரு நாளும் மறவாது ஈயும் வள்ளன்மையுடைய கைகளையுடைய கற்றவர்கள் வாழும் ஒலி மிக்க சீகாழியில் வீற்றிருக்கும் பாம்பினைத் தரித்த அரசே! அசுரர்களது மூன்று புரங்களையும் எரித்தலைச் செய்த அம்பினை உடையவனே! என்று கூறி துதிப்பவர்களே தத்துவ ஞானம் உணர்ந்த மேலானவர்கள் ஆவர்.

உரவு — ஞானம்; கரவா — மறைத்தல் இல்லாத; ஒரு நாளுங்கரவா என்றமையால் எந்நாளும் மறைக்காது அளிப்பவர்கள் என்று கூறியதாயிற்று. வண்கை — வளமையுடைய கை, கொடுத்தலில் சலித்தல் இல்லாத கை.

கலிக்காழி — இங்கு கலி என்ற அடைமொழிக்கு கடல், ஒலி, எழுச்சி என்ற மூன்று பொருள்களில் ஒன்றைக் கொள்ளலாம். ஒலி என்று கொள்ளுமிடத்து வேதஒலி, நாதஒலி, கீதஒலி, மகளிர் விளையாட்டுஒலி முதலியன கொள்க.

அரவார் அரையா — அரவு ஆர் அரையா, அதாவது பாம்பினைக்கொண்ட அரையை (இடைப்பிரதேசத்தினை) உடையவனே என்றோ பாம்பினைக்கொண்ட அரசே என்றோ இருவகையும் பொருள் கொள்ளலாம்.

அரையன் — அரசன்

சரவா — சரம் (அம்பு), அதை உடையவனே!

தத்துவஞானத்தலையார் — தத்துவ ஞானம் உணர்ந்த தலையார் என்றோ தத்துவஞானம் உணர்ந்தவர்களில் தலையார் என்றோ கொள்க. தத்துவ ஞானம் — மெய்ஞ்ஞானம்.

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்றபடி கற்றவர்க்கு கற்றவர்கள் வாரி வழங்குவர். தம்மால் இயல்வதைக் கரவாது வழங்குவர். அத்தகையோர் சேருஞ் சீகாழி என்று சீகாழியின் கொடைச்சிறப்பு உரைத்தமை கண்டு கொள்க. அடியார்களுக்கும், இரப்போர்க்கும் கொடுத்தலைப் பற்றி முன் பதிகத்தில் கூறியருளியதையும் நினைவு கூர்க.

மொய்சேர்வண்டுண் மும்மதநால்வாய் முரண்வேழக்
கைபோல்வாழை காய்குலையீனுங் கலிக்காழி
மைசேர்கண்டத் தெண்டோள்முக்கண் மறையோனே
ஐயாவென்பார்க் கல்லல்களான அடையாவே. 2

2. மொய்த்தலையுடைய வண்டுகள் உண்ணுகின்ற மும்மதமும்; தொங்குகின்ற வாயினையுமுடைய வலிமை பொருந்திய யானையின் துதிக்கையைப் போல வாழைக்குலை ஈனும் கலிசிகாழியில் வீற்றிருக்கும் கருப்பு நிறம் பொருந்திய கழுத்தினையும் எட்டுத் தோள்களையும், மூன்று கண்களையுமுடைய மறையவனே! தலைவனே! என்று துதிப்பவர்களுக்குத் துன்பங்கள் சென்று அடையா என்பதாம்.

மொய் — மொய்த்தல், நெருங்குதல். மும்மதம் — யானையின் கன்னம், கபோலம், பீஜம் என்ற மூன்றிடங்களிலிருந்தும் பெருகுகின்ற மதநீர். இதனை வண்டுகள் உண்ணும் என்று கூறப்படுகிறது.

கைபோல் வாழை — யானையின் துதிக்கை போல வாழைக்குலை என்றதால் சீகாழியின் வளம் கூறியதாகக் கொள்க,

மை — கரு நிறம் (விஷம் தங்கியதால் ஏற்பட்டதாம்)

மறையோன் — மறை எனப்படும் வேதங்களை அருளிச் செய்த முதல்வன், மறைகளால் 'தனிமுதலாம்பரன்' எனப் போற்றப்படும் பெரியோன்.

இளகக்கமலத் தீன்களியங்குங் கழிசூழக்
களகப்புரிசைக் கவின்ஞர்சாருங் கலிக்காழி
அளகத்திருநல் நுதலிபங்கா அரனேயென்(று)
உளகப்பாடும் அடியார்க்குறுநோய் அடையாவே. 3

3. தாமரை மொட்டு மலர்தலால் அதனின்றும் உண்டான கள் (தேன்) ஓடுகின்ற கழி சூழவும், சுண்ணும்புச் சாந்து பூசப்பெற்ற மதிலால் அழகு சார்தலும் உடைய ஒலிமிக்க சீகாழியில் எழுந்தருளியிருக்கும் அழகிய கூந்தலையும் நல்ல நெற்றியினையுமுடையவளாகிய பார்வதி தேவியை ஒரு பங்கில் கொண்டவனே! அரனே! என்று மனம் உருகப்பாடும் அடியார்களுக்கு நோய்கள் அடையா என்பதாம்.

கமலம் இளகுதல் — மொட்டு அலர்தல்.

கமலத்து ஈன் கள்இயங்கும் கழி: வாவிகளிலும் குளங்களிலும் வயல்களிலும் மலர்கின்ற தாமரையின் தேன் ஓடைகள் வழிச்சென்று கழிகளில் சேரும் எனக்கொள்க

கழி — உப்பளம். கழி சூழ என்று ஓதப்பட்டு இருத்தலைக் கொண்டு மதிலைச் சூழ்ந்து இருக்கும் அகழி என்பதன் முதற்குறையாக கழி என்று ஓதியருளியிருக்கலாமென்றும் கொள்ளக்கிடக்கின்றது. அங்ஙனமாயின் அகழியிலேயே மலரும் தாமரையின் தேன் அதில் இயங்கும் எனக் கொள்க. அகழியாலும் மதிலாலும் அழகு பெற்ற சீகாழி என்பது முதல் இரண்டடிகளால் பெற்ற பொருளாகும்.

உளகப்பாடும் — 'உள் அகப் பாடும்' அதாவது மனம் பொருந்திப்பாடுதலாம் (திருத்தருமை ஆதீனக்குறிப்புரையில் உள்ளது)

எண்ணார்முத்தம் ஈன்றுமரகதம் போற்காய்த்துக்
கண்ணார்கமுகு பவளம்பழுக்குங் கலிக்காழிப்
பெண்ணேர்பாகா பித்தாபிரானே என்பார்க்கு
நண்ணாவினைகள் நாடொறுமின்பந் நணுகும்மே. 4

4. எண்ணுதற்கரிய முத்துக்கள் போல அரும்பிப்பூத்து, மரகதம் போல் காய்த்துக் கண்களுக்கு நிறைந்த காட்சியாய்க் கமுகு மரங்கள் பவழங்கள் போலப் பழுத்தலைச் செய்கின்ற கலிக்காழியில் எழுந்தருளிய பெண்ணேர் பாகனே! பித்தா! பிரானே! என்று துதிக்கும் அடியவர்களுக்கு வினைகள் வந்துசேரமாட்டா! அதற்கு மாறாக நாள்தோறும் இன்பமே வந்தடையும்.

முத்து, மரகதம், பவழம் ஆகியவை முறையே கமுகு (பாக்கு) மரத்தின் அரும்பு, காய், பழம் ஆகியவற்றின் நிறத்தைக் குறித்து நின்றன.

பெண்ணேர்பாகன் — மங்கை பங்கன்; பித்தன் — உயிர்களிடம் அளவுகடந்த பற்று உடையவன்; பிரான் — தலைவன், கடவுள்.

மழையார்சாரற் செம்புனல்வந்தங் கடிவருடக்
கழையார்கரும்பு கண்வளர்சோலைக் கலிக்காழி
உழையார்கரவா உமையாள்கணவா ஒளிர்சங்கக்
குழையாவென்று கூறவல்லார்கள் குணவோரே. 5

5 மழை நிறைந்த மலைச்சாரல்களிலிருந்து (பெருக்கெடுத்து வரும்) செம்மை நிறமுடைய நீர் அடிவருடலால் மூங்கிலையொத்த வளமான கரும்புகள் தூங்குகின்ற சோலைகளையுடைய கலிக்காழி எழுந்தருளிய மானேந்திய கையனே! உமையம்மையாரின் கணவனே! ஒளிவிடும் சங்கக்குழையை காதிலணிந்தவனே! என்று கூறவல்லவர்கள் குணமுடையவராவர்.

தண்ணீர் ஓடிவந்து கருப்பஞ் சோலைகளில் பாய்தலை கரும்புகளின் அடிவருடலாகக் கூறியது ஓர் நயம். அடி

வருடும் போது உறக்கம் வருதல் இயல்பாகலின் கரும்பு கண் வளர் சோலை எனக்கூறியருளினர் போலும்.

அடிவருடல் — பாதத்தினை மெதுவாகத் தடவுதல்.

குழை — ஆண்களின் காதாபரணம்.

குறியார்திரைகள் வரைகள்நின்றுங் கோட்டாறு
கறியார்கழிசம் பிரசங்கொடுக்குங் கலிக்காழி
வெறியார்கொன்றைச் சடையாவிடையா என்பாரை
அறியாவினைகள் அருநோய்பாவம் அடையாவே 6-7

(6-7) மலைகளினின்றும் குறித்தலையுடைய அலைகளோடு கூடிய கரையையுடைய ஆறு மிளகில் இருந்து சழிக்கப் பட்ட சம்பிரசத்தைக் கொடுக்கும் கலிக்காழி வீற்றிருக்கும் மணம் பொருந்திய கொன்றை மலரணிந்த சடையினையுடை வனே! விடையவனே! என்று சொல்லித் துதிக்கும் அடியவர் களை வினைகள் அறியவே மாட்டா (அந்த வினைகளால் ஏற்படும்) நோய்களும் பாவங்களும் அடையா என்பதாம்.

வினைகளாலேயே நோய்களும் பாவங்களும் உண்டாவ தால் வினைகள் அறியா என்பதனால் நோய்களும் இல்லையாம் என்று அருளிச் செய்ததாகக் கொள்க. காரணம் இல்லாத போது காரியமும் இல்லை அல்லவா?

குறித்தல் — கீழே இறங்குதலைக் குறியாகக் கொள் ளுதல்.

கோட்டாறு — கரையையுடைய ஆறு அல்லது வளைந்து செல்லுதலையுடைய ஆறு.

கறி — மிளகு; மலைகளினின்றும் கீழே இறங்கும் நீர் மலைச்சாரல்களில் உள்ள மிளகுக் கொடிகளின் வழியாகப் பாய்ந்து அதன் மணத்தைக் கொணர்ந்து ஆற்று நீரில் கலத்தல் பற்றி கோட்டாறு கறியார்கழி சம்பிரசம் கொடுக் கும் கலிக்காழி எனக் கூறியருளினர் எனக்கொள்க.

உலங்கொள்சங்கத் தார்கலியோதத் துதையுண்டு
கலங்கள்வந்து கார்வயலேறுங் கலிக்காழி
இலங்கைமன்னன் தன்னையிடர்கண் டருள்செய்த
சலங்கொள்சென்னி மன்னுவென்னத் தவமாமே. 8

8. திரட்சியுடைய சங்கங்கள் நிறைந்த கடல் நீர்ப் பெருக்கால் உந்தப்பட்டு மரக்கலங்கள் வயல்களில் வந்து ஏறுதலையுடைய கலிக்காழியில் எழுந்தருளிய, இலங்கை மன்னனாகிய இராவணனை இடருறும்படிப் பார்த்துப் பின் அருள் செய்த கங்கையைத் தலைமீது வைத்த மன்னவனே, என்று சொல்ல அதுவே ஒரு பெரிய தவமாகும்.

உலம்-திரட்சி; ஆர்கலி — கடல்; ஓதம் — வெள்ளம், நீர்ப்பெருக்கு; கலம் — மரக்கலம், தோணி; சலம் — இங்கு கங்கையைக் குறித்தது.

கலிக்காழி மன்னு, சலங்கொள் சென்னி மன்னு என ஈரிடத்தும் மன்னு என்பதனைக் கூட்டிப் பொருள் கொள்வதும் சிறப்புடைத்தாம்.

தவம் என்பது காட்டிலோ, மலைக்குகையிலோ தனித்து அமர்ந்து உண்டி நீக்கி, உடலை வருத்திச் செய்யப்படுவதொன்றாகும் என்று நினைக்காதீர்கள். கலிக்காழிமன்னு, சென்னியில் கங்கை வைத்த மன்னு என்று உளமுருகித் துதித்தலே ஒரு பெரிய தவமாகும் என்று அறிவீர்கள் என்பதே இத்திருப்பாடல் உலகர்க்கு அறிவிக்கும் செய்தியாகும்.

ஆவிக்கமலத் தன்னமியங்குங் கழிசூழக்
காவிக்கண்ணார் மங்கலமோவாக் கலிக்காழிப்
பூவிற்றோன்றும் புத்தேளொடுமா லவன்றானும்
மேவிப்பரவும் அரசேயென்ன வினைபோமே. 9

9. குளங்களில் உள்ள தாமரை மலர்களில் உறையும் அன்னங்கள் நடமாடுகின்ற உப்பங்கழிகள் சூழ்ந்ததும், மகளிரது மங்கல ஒலி நீங்காததுமான கலிக்காழியில் எழுந்

தருளியிருக்கும், நான்முகனும் திருமாலும் விருப்பத்துடன் துதித்து வணங்கும் அரசே! என்று துதிக்க வினைகள் மாயும்.

ஆவி — குளம்; இயங்கும் — நடமாடித்திரியும்;

காவிக்கண்ணார் — நீலமலர் போலும் கண்களையுடைய பெண்கள். பூவில் தோன்றும் புத்தேள் — பிரமதேவன்; மேவிப் பரவுதல் — விருப்பத்துடன் துதித்தல்.

மலையார்மாடம் நீடுயரிஞ்சி மஞ்சாருங்
கலையார்மதியஞ் சேர்தருமந்தண் கலிக்காழித்
தலைவாசமணர் சாக்கியர்க்கென்றும் அறிவொண்ணா
நிலையாயென்னத் தொல்வினையாய நில்லாவே. 10

10. மலையையொத்த மாடங்களும், நீண்டு உயர்ந்த மதில்களும், மேகத்தைப் பொருத்திய கலைகள் நிறைந்த சந்திரனும் சேர்தலையுடைய அழகிய குளிர்ச்சி பொருந்திய கலிக்காழியில் எழுந்தருளியிருக்கும் தலைவனே! சமணர், பௌத்தர் என்னும் புறச்சமயிகளாகிய இவர்க்கு என்றும் அறியப்படாத தன்மையினனே! என்று துதிக்கப் பழைய வினைகளான யாவும் நில்லாமல் ஓடிவிடும்.

சேர்தரும் அந்தண் கலிக்காழி எனப்பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

இஞ்சி — மதில்; மஞ்சு — மேகம்.

வடிகொள்வாவிச் செங்கழுநீரிற் கொங்காடிக்
கடிகொள்தென்றல் முன்றினில்வைகுங் கலிக்காழி
அடிகள்தம்மை அந்தமில்ஞான சம்பந்தன்
படிகொள்பாடல் வல்லவர்தம்மேல் பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்

11. தேனைக் கொண்ட குளங்களில் உள்ள செங்கழுநீர்ப் பூக்களில் தேனில் அளைந்து அதன் மணத்தைக் கொள்ளும் தென்றல் காற்று வீட்டு முன்றில்களில் உலவும் சீகாழியில் எழுந்தருளியுள்ள அடிகளாகிய சிவபெருமானை, எல்லையில்லாப் புகழுடைய திருஞானசம்பந்தன் பாடிய

குணத்தைக் கொள்கின்ற பாடல்களில் வல்லவர்கள் தம்மேல் உளவாய பழிகள் யாவும் அகன்று போம்.

வடிகொள் வாவி என்பதில் உள்ள வடி என்ற சொல்லை எப்பொருளில் ஆசாரியர் கையாண்டுள்ளார் என்பது புலப் படவில்லை. வடி என்ற சொல்லுக்குக் கள் என்ற பொருளும் உள்ளமையாலும் கள் என்பது தேனுக்கும் பொருந்துமாத லாலும் தேன் என்று எம்மால் கொள்ளப்பட்டது வாவிகள் தேனை எங்ஙனம் கொள்ளுமெனில், மலர்களினின்றும் பெரு கும் தேன் கலத்தலால் கொள்ளும் என்க.

வடி என்பதற்குத் திருத்தம் அதாவது அழகு என்ற பொருளும் கொள்ளலாம். அப்பொழுது அழகுடைய குளம் என்று பொருள் கொள்க. அல்லது வடிகொள் என்ப தற்கு வடிதலைக்கொள்ளுகின்ற என்றபடி பொருள் கொண்டு வாவி நிறைந்து அதிகமான நீர் வடிதலைக் கொள்கின்ற என்றும் கொள்ளலாம்.

அங்ஙனமே படி என்ற சொல்லுக்கும் குணம் என்ற பொருள் கொள்ளப்பட்டு குணம் மிக்க பாடல்கள் என்று எம்மால் உரைக்கப்பட்டது.

அந்தம் — முடிவு; இல் — இல்லாத; அதாவது பெருமைக்கு முடிவு இல்லாத என்றபடி.

தென்றற்காற்று குளங்களில் உள்ள செங்கழுநீர்ப்பூக் களில் அலைகின்றது. தேனின் மணத்தையும் பூக்களின் மணத்தையும் கொண்டு சீகாழி வீடுகளின் முன்புறத்தில் உலவுகின்றது அத்தகைய சிறப்புடைய சீகாழி எனக்கூறிய தாகக் கொள்க.

இத்திருப்பதிகம் வல்லவர்மேல் பழிகள் சாரா, முன் இருப்பினும் அகன்று போம் என்று பலன் கூறியருளியது கண்டு கொள்க.

குறிப்பு இத்திருப்பதிகத்தின் 7ம் திருப்பாடல் மறைந்து போய்க் கிடைக்காதாயிற்று.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீபஹாதேவஜயம்

சீகாழி — 4

பண் : சீகாமரம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

பண்ணின் நேர்மொழி மங்கை மார்பலர்
  பாடி யாடிய ஓசை நாள்தொறுங்
கண்ணின் நேரயலே பொலியுங் கடற்காழிப்
பெண்ணின் நேரொரு பங்கு டைப்பெரு
  மானை எம்பெரு மான்என் றென்றுன்னும்
அண்ண லாரடியார் அருளாலுங் குறைவிலரே. 1

பதிகப் பொழிப்புரை : 1. பண்ணின் இசையினை ஒத்த மொழியுடைய மகளிர் பலர் பாடுதலும் ஆடுதலும் செய்தலால் உண்டாகும் ஓசையானது நாள்தோறும் கண் எதிரில் பக்கத்தில் விளங்குகின்ற கடற் காழியில் வீற்றிருக்கும், பெண்ணான உமாதேவியாரை சரியாக ஒரு பாதியில் உடைய சிவபெருமானை எமது பெருமான் (முழுமுதற் கடவுள்) என்று தியானம் செய்யும் சிவனடியார்கள் (பொருளால் மட்டுமின்றி) அருளாலும் குறைவில்லாதவர்கள் ஆவார்கள்.

பண்ணின் நேர் – மொழி — பண் இங்கு இசையையும் அதன் மூலம் பெறும் இன்பத்தையும் குறித்தது. அதே இன்பம் மங்கைமாரது மொழியாலும் பெறலாம் என்பது கருத்து.

கண்ணின் நேர் – நேரில் காணும்படி என்பது பொருள்.

கடற்காழி — கடல் அருகில் இருக்கும் சிகாழி.

பெண்ணின் நேர்.......பெருமான் — தமது திருமேனியில் சரிபாதியினை இறைவர் அம்மைக்குக் கொடுத்துவிட்டதைக் குறித்தது. மாதியலும் பாதியன் என்பது பொருள்.

உன்னுதல் — நினைத்தல், இங்கு தியானித்தல் என்ற பொருளில் வந்தது.

அருளாலும் குறைவிலர் — அருளாலும் என்பதில் உள்ள 'உம்' மையால் இம்மைக்குரிய பொருளாலும் குறை விலர் என்பது பெறப்பட்டது.

"அருளிலார்க் கவ்வுலகம் இல்லை பொருளிலார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

என்ற செந்தமிழ்ப் பொது மறையால் அருள் பொருள் என்ற இரண்டின் இன்றியமையாமையையும் அறியலாம்.

மொண்ட லம்பிய வார்தி ரைக்கடல்
மோதி மீதெறி சங்கம் வங்கமுங்
கண்டலம் புடைசூழ் வயல்சேர் கலிக்காழி
வண்ட லம்பிய கொன்றை யானடி
வாழ்த்தி யேத்திய மாந்தர் தம்வினை
விண்டல் அங்கெளிதாம் அதுநல் விதியாமே. 2

2. அலைதலைச் செய்து கரையை ஈரமாக்குகின்ற நீண்ட அலைகள் மீண்டும் கடலையடைந்து மோதி எறிகின்ற சங்கு களும் மரக்கலங்களும் தாழைச் செடிகள் புடை சூழ்ந்த வயல்களில் சேர்கின்ற சீகாழிப் பதியில் எழுந்தருளியுள்ள, வண்டுகள் ஒலிக்கின்ற கொன்றை மாலையணிந்த, சிவ பிரானது திருவடிகளை வாழ்த்தித் துதித்த மாந்தர்களது வினைகள் நீங்குதல் மிகவும் எளிதாகும். அதுவே நன்மையை அளிக்கும் இறைவனது ஆணையுமாகும்.

மொண்டு — அலைவு, முரண்டு.

அலம்புதல் — முதல் அடியில் கழுவுதல் எனவும் மூன்று வது அடியில் ஒலித்தல் என்றும் பொருள்படும்.

விதி — ஆணை, ஊழ் எனலுமாம். நன்மையைத் தரும் ஊழ் ஆகூழ் எனப்படும். (திருக்குறள் - 371)

நாடெ லாமொளி எய்த நல்லவர்
நன்று மேத்தி வணங்கு வார்பொழிற்
காடெ லாமலர் தேன்துளிக்குங் கடற்காழித்
தோடு லாவிய காது ளாய்சுரி
சங்க வெண்குழை யாயென் றென்றுன்னும்
வேடங் கொண்டவர்கள் வினை நீங்கலுற்றாரே. 3

3. நாடெலாம் புகழ் அடைய நல்லவர்கள் நன்றாகத் துதித்து வணங்குதலைச் செய்கின்றதும், நீண்ட பொழிற் காடுகளில் எல்லாம் மலர்கள் தேனைத் துளிக்கின்றதுமான கடற்காழியில் எழுந்தருளிய தோடணிந்த காதுடைய வனே! வெண்மையான சங்கினால் ஆன குழையைத் தரித் தவனே! என்று இடைவிடாது தியானித்தலைச் செய்கின்ற சிவவேடங் கொண்டவர்கள் வினைகள் (தங்களை விட்டு) நீங்கலுற்றவர்களாவார்கள்.

ஒளி — புகழ்; பொழிற்காடு — காடு போல் அடர்த்தியான சோலை; துளித்தல் — சொட்டுதல்; சங்கக்குழை — சங்கினாலாகிய குண்டலம் (ஆண்களின் காதணி).

தோடணிந்த காது — அம்மையின் பாகம்.

சங்கக்குழை — அப்பனின் பாகம்.

வேடம் — அடியவர் வேடம், குறைவிலாத தவவேடம். (திருநீறு, ருத்திராக்ஷமணிந்த வேடம்)

மையி னார்பொழில் சூழ நீழலில்
வாச மார்மது நல்க நாள்தொறுங்
கையி னார்மலர் கொண்டெழுவார் கலிக்காழி
ஐய னேஅர னேயென் றுதரித்(து)
ஓதி நீதியு ளேநி னைப்பவர்
உய்யு மாறுலகில் உயர்ந்தாரி னுள்ளாரே. 4

4. மேகத்தைப் பொருந்திய பொழில்கள் சூழ, அப் பொழில்களின் நிழலில் மணம் பொருந்திய தேன் நிறைந்

திருக்க, நாள் தோறும் கைகள் நிறைய மலர்களைக் கொண்டு சிவ பூஜையில் முயல்பவர்கள் நிறைந்த ஓசை மிக்க சீகாழியில் எழுந்தருளிய ஐயனே! அரனே! என்று விரும்பி ஓதி முறைமையாக மனத்தினுள் நினைப்பவர்கள் பிறவித்துன்பத்தில் ஆழாதவாறு உலகில் சிவஞானியர் களினத்துள் இருப்பவர்களாவார்கள்.

பிறவித் துன்புறாது உய்யும் நெறியில் உள்ளவர்கள் சிவ ஞானியர்களே ஆவர். சீகாழி ஐயனே, அரனே என்று ஆதரித்து ஓதி உள்ளே நினைப்பவர்களும் அத்தகைய சிவ ஞானியருடன் சேர்ந்து தாமும் பிறவித்துன்புறாது தப்புவர் என்று கூறியருளியதாகக் கொள்க.

மலிக டுந்திரை மேல்நி மிர்ந்தெதிர்
வந்து வந்தொளிர் நித்தி லம்விழக்
கலிக டிந்தகையார் மருவுங் கலிக்காழி
வலிய காலனை வீட்டி மாணிதன்
இன்னு யிரளித் தானை வாழ்த்திட
மெலியுந் தீவினைநோ யவைமே வுவர்வீடே. 5

௫. மிக்க விரைவுடைய அலைகளின்மேல் நிமிர்ந்து எதிர் வந்து வந்து ஒளிர்கின்ற முத்துக்கள் விழுதலைச் செய்வதும் (எரியோம்புதலைச் செய்வதன் மூலம்) உலகிற்கு வரும் துன்பத்தை நீக்கிய கைகளை உடையவர்கள் பொருந்தி வாழ்கின்றதுமான ஒலி நிறைந்த சீகாழிப்பதியில் வீற்றிருந்தருளும், கொடிய காலனைக் கொன்று பிரமசாரியான மார்க்கண்டேயருக்கு உயிர்கொடுத்த, சிவபிரானை வாழ்த்திடத் தீவினைகளும் அவற்றால் ஏற்படும் துன்பங்களும் தேய்ந்து போகும். (அதுமட்டுமல்ல, அங்ஙனம் வாழ்த்துபவர்கள்) வீடு எனப்படும் மோட்சத்தையும் அடைவர்.

வந்து வந்து — அடுக்கு விரைவு பற்றி வந்தது.

கலி கடிந்த கையார் — தமது கொடையினால் உலகின் வறுமையை நீக்கிய கைகளையுடையவர்கள் என்றும் கொள்ளலாம். வீட்டுதல் — கொல்லுதல், அழித்தல்.

மற்றும் இவ்வுல கத்து ளோர்களும்
வானு ளோர்களும் வந்து வைகலுங்
கற்ற சிந்தையராய்க் கருதுங் கலிக்காழி
நெற்றி மேலமர் கண்ணி னானை
நினைந்தி ருந்திசை பாடு வார்வினை
செற்ற மாந்தரெனத் தெளிமின்கள் சிந்தையுளே. 6

6. இந்த நிலவுலகத்து மக்களும் மற்றும் வானுலகத்துள்ள தேவர்களும் நாள்தோறும் வந்து, சிவபிரான் திருவடியை வழிபடக் கற்றறிந்த சிந்தையராய்ச் சிறந்த தலமென்று கருதுகின்ற சீகாழியில் வீற்றிருக்கும் நெற்றிக் கண்ணனாகிய சிவபிரானைத் தியானித்து இருந்து (பின்னர்) அப்பெருமான் புகழ் பாடுகின்றவர்களை வினைகள் யாவும் அழித்த மாந்தர் அதாவது சிவஞானிகள் என்று சிந்தை உள்ளே தெளிந்து கொள்வீர்களாக. (உலகத்தவர்க்கு உரைத்தது.)

கருதல் — எண்ணுதல், நினைத்தல். வைகலும் — நாள் தோறும்; நெற்றிமேல் அமர் கண்ணினான் — லலாடாக்ஷ: என்ற வடமொழித் திருநாமத்தின் தமிழ் வடிவம்.

தான லம்புரை வேதி யரொடு
தக்க மாதவர் தாந்தொ ழப்பயில்
கானலின் விரைசேர விம்முங் கலிக்காழி
ஊனு ளாருயிர் வாழ்க்கை யாயுற
வாகி நின்ற வொருவனே யென்றென்(று)
ஆனலங் கொடுப்பார் அருள்வேந்த ராவாரே. 7

7. நன்மையும் பெருமையுமுடைய வேதியர்களும், பெருந்தவத்தோர்களும் தொழுது வணங்க, கடற்கரைச் சோலைகளின் மணம் பெருக்கெடுத்துப் பரவும் சீகாழியில், உடம்பினுள் பொருந்திய, உயிர் போல உயிர்க்கு உயிராய் வாழும் தன்மையான உறவாகி நின்ற ஒருவனே என்று துதித்து, பசுக்கள் கொடுக்கும் பால், தயிர், நெய் இவை

களை அபிஷேகம் புரியப் பயன்படுத்தும் பக்தர்கள் அருள் வேந்தர்கள் ஆவார்கள்.

ஊன் — உடம்பு; ஆருயிர் — பொருந்திய உயிர், உயிர் வாழ்க்கையாய் — உடம்பில் உயிர் உறைவது போல, உயிர்க்குள் உயிராய் நிற்குந் தன்மையாய்.

ஆனலம் — ஆன் நலம், அதாவது பசுக்களிடமிருந்து பெறும் பால், தயிர், நெய் இவைகளாம். அருள் வேந்தர் — அருள் பெற்ற தலைவர்.

மைத்த வண்டெழு சோலை ஆலைகள்
சாலி சேர்வய லார வைகலும்
கத்து வார்கடல் சென்றுலவுங் கலிக்காழி
அத்த னேயர னேய ரக்கனை
அன்ற டர்த்துகந் தாயு னகழல்
பத்தராய்ப் பரவும் பயனீங்கு நல்காயே. 8

8. கருமையுடைய வண்டுகள் கூட்டமாய் எழுகின்ற சோலைகள், கரும்பாலைகள், நெல் பயிர் விளையும் வயல்கள் இவைகள் நிறைய, ஒலிக்கின்ற கடல் தினந்தோறும் சென்று உலவுகின்ற சீகாழியில் எழுந்தருளிய தந்தையே! அரனே! அரக்கனை அன்று நெருக்கி உயர்ந்தவனே! உனது திருவடிகளைப் பக்தர்களாய் பரவும் பயனை இம்மையிலேயே அருள்வாய். (என்று இறைவனைப் பிரார்த்தனை செய்வதாக இத்திருப்பாடல் அமைந்துள்ளது)

இறைவனது கழல்களைப் பரவும் பயன் மறுமையில் கிடைக்கும் என்று கருதப்படுதலால் அதனை இம்மையிலேயே அருள்வாய் எனப் பிரார்த்தனை செய்ததாகக் கொள்க.

அன்று அடர்த்து — இதில் உள்ள அன்று என்பது இராவணன் திருக்கயிலைமலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற நாளைக் குறிக்கும். ஈங்கு — இம்மை, அதாவது இப்பிறவியிலேயே என்ற பொருளைக் குறித்தது.

பருமராமொடு தெங்கு பைங்கத
லிப்ப ருங்கனி உண்ண மந்திகள்
கருவரா லுகளும் வயல்சூழ் கலிக்காழித்
திருவின் நாயக னாய மாலொடு
செய்ய மாமலர்ச் செல்வ னாகிய
இருவர் காண்பரியா னெனவேத்துத லின்பமே. 9

9. பருத்த மராமரங்களோடு (ஆச்சா மரம்) தென்னை மரங்கள் கூடியதும், குரங்குகள் பசிய வாழைகளின் கனிகளை உண்ணவும், கரிய வரால்மீன்கள் உகளும் வயல்கள் சூழ்தலையுடைய சீகாழியில் வீற்றிருந்தருளும், இலக்குமி தேவியின் நாயகனான திருமாலும் செந்தாமரையில் வீற்றிருக்கும் மறைச் செல்வனாகிய பிரமதேவனும் ஆகிய இருவரும் காணுதற்கரியவனாகிய, சிவபிரானே என்று ஏத்துதல் மிக்க இன்பத்தைத் தருவதாகும்.

உகளுதல் — மீன்கள் தண்ணீரில் பிறழ்ந்து திரிதல் குதித்தல், பாய்தல் என்றும் கொள்ளலாம்.

பிண்ட முண்டுழல் வார்க ளும்பிரி
யாது வண்துகி லாடை போர்த்தவர்
கண்டு சேரகிலா ரழகார் கலிக்காழித்
தொண்டை வாயுமை யோடு கூடிய
வேட னேசுட லைப்பொ டியணி
அண்ட வாணனென்பார்க் கடையா அல்லல்தானே. 10

10. சோற்று உருண்டைகளை உண்டு திரிபவர்களாகிய சமணர்களும், உடலை விட்டு நீங்காது வண்மையான துவராடையினைப் போர்த்துக் கொண்டு திரிபவர்களுமான பௌத்தர்களும் உண்மையினை அறிந்து இறைவனும் நமது சிவபிரானைச் சேரும் அறிவாற்றல் இல்லாதவர்கள். அழகு பொருந்திய சீகாழியில் கோவைப்பழம் போல் சிவந்த வாயினையுடைய உமாதேவியாருடன் கூடிய மாதொருபாகமாம் கோலம் கொண்டவனே! சுடலைப்பொடியணிகின்ற

அண்டவாணனே! என்று துதிப்பவர்களுக்கு அல்லல்கள் அடையாவாம்.

பிண்டம் — சோற்று உருண்டை, கவளம் எனவும் கூறப் படும். முன் சீகாழி — 2 திருப்பதிகத்தில் "தங்கையிட உண் பார்" என்று அருளியதும் காண்க. சோற்றினை உருண்டை யாக உருட்டிப் பிறர் தங்கையிலிட அதனை நின்று கொண்டே உண்ணுதல் சமணத்துறவியர் வழக்கம்.

துகிலாடை போர்த்தவர் — பெண்கள் போல உடல் முழுவதும் மறையும்படி ஆடையினைப் போர்த்துக் கொள்ளு தல் பௌத்தர் வழக்கம். இவ்விருவரது வழக்கத்தையும் சேர்த்து மற்றும் வேறு இடங்களிலும் பிள்ளையார் அருளிச் செய்துள்ளார். "நின்று கவளம் பல கொள்கையரொடு மெய்யிலிடு போர்வையரும்" 3-ம் திருமுறை, 69வது திருப் பதிகம், 10வது திருப்பாடல்) மற்றவை வருமிடங்களில் காட்டப்படும்.

சேரகிலார் — இதில் கில் என்பது ஆற்றல் உணர்த்தும் இடைச் சொல். சேரும் ஆற்றல் இல்லாதவர் என்று பொருள். இங்கு ஆற்றல் அறிவின் மேல் நின்றது.

வேடன் — வேடம் அதாவது திருக்கோலத்தினைக் கொண்டவன். (அல்லது) வேடுவக் கோலத்தில் வந்தவன் என்றும் கொள்ளல் பொருந்தும்.

அண்டவாணன் — அண்டங்களில் வாழ்பவன்.

பெயரெ னும்மிவை பன்னி ரண்டிலும்
உண்டெ னப்பெயர் பெற்ற வூர்திகழ்
கயலுலாம் வயல்சூழ்ந் தழகார் கலிக்காழி
நயன டன்கழ லேத்தி வாழ்த்திய
ஞான சம்பந்தன் செந்த மிழுரை
உயருமா மொழிவார் உலகத் துயர்ந்தாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பன்னிரண்டு பெயர்கள் உண்டு எனப் புகழ்பெற்ற திருத்தலமும், விளக்கத்துடன் கூடிய கயல் மீன்கள் உலவுகின்ற வயல்கள் சூழ்ந்து அழகு பொருந்தியதுமான சீகாழிப் பதியில் எழுந்தருளியிருக்கும், நீதி சொரூபனும் கூத்தனுமாகிய சிவபிரானது திருவடிகளைத் துதித்து வாழ்த்திய திருஞானசம்பந்தனது செந்தமிழ்ப் பாடல்களை தாங்கள் உயரவேண்டும் என்று ஓதுபவர்கள் உலகத்திலே உயர்ந்தவர்கள் ஆவார்கள்.

நயன் — நயம் நீதி, அதையுடையவன் நயன். நயன் என்பதற்கு அருளுடையவன் என்ற பொருளும் கூறப்பட்டுள்ளது. (திருத்தருமையாதீனக் குறிப்புரை)

தாம் உயர்ச்சியடைய வேண்டும் என்று எண்ணி ஓதுபவர் அங்ஙனமே உயர்ச்சியடைவர் என்பது இப்பதிகப் பயனும். வேண்டுவார் வேண்டுவதே ஈவானது தோத்திரமாகையால் அப்படிக் கிடைக்கும் என்று கொள்க.

சிவம்

சீகாழி-3 குறியார் திரைகள் எனத் தொடங்கும் பாடல்— மேலும் சிறு விளக்கம்

குறியார் திரைகள், வரைகள் நின்றுங் கோட்டாறு, கறியார் கழி என்பது கடல் நீர், மலை நீர், உப்பளங்களின் குழம்பிய நீர் என்று சீகாழிப்பதி மூவகை நீரினால் பெறும் வளப்பத்தைக் குறிக்கின்றது. இப்பாடலில் வரும் சம்பிரசம் என்ற சொல் உண்மைப் பாடமாகாது. சம்பிரதம் அல்லது சம்பிரமம் என்றே இருக்கலாம். சம்பிரசம் என்பதே பாடமாயின் திருஞானசம்பந்தரின் திருவுள்ளக் கருத்து தமக்கும் புலப்பட்டிலது என்று இராணிப்பேட்டை புலவர் திரு. பி. மா. சோமசுந்தரனார் அவர்கள் இது பற்றிய நமது ஐயத்துக்கு விளக்கமாகத் தெரிவித்துள்ளார்கள்,

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

சீகாழி—5

பண் : காந்தாரம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

நலங்கொள் முத்தும் மணியும் அணியும் திரளோதங்
கலங்கள் தன்னிற் கொண்டு கரைசேர் கலிக்காழி
வலங்கொள் மழுவொன் றுடையாய் விடையா யென வேத்தி
அலங்கல் சூட்ட வல்லார்க் கடையா அருநோயே. 1

பதிகப்பொழிப்புரை — 1. அழகுடைய முத்துக்களையும் மணிகளையும் திரண்ட அலைகளையுடைய கடல், மரக்கலங்களில் கொண்டு கரைசேர்கின்ற ஒலிமிக்க சீகாழியில் எழுந்தருளிய வலிமை பொருந்திய மழுவாயுதம் ஒன்று உடையவனே!, எருதினை வாகனமாகக் கொண்டவனே! எனத் துதித்துப் பூமாலை சூட்ட வல்லவர்க்கு தீர்தற்கு அருமையானது என்று கூறப்பட்டுள்ள பிறவிநோய் அடையாது.

அலங்கல் — பூமாலை, அருநோய் — பிறவிப்பிணி.

ஊரார் உவரிச் சங்கம் வங்கங் கொடுவந்து
காரார் ஓதங் கரைமேல் உயர்த்துங் கலிக்காழி
நீரார் சடையாய் நெற்றிக் கண்ணா என்றென்று
பேரா யிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே. 2

2. ஊர்தலையுடையதும், உப்புக்கடலில் உள்ளவைகளுமான சங்குகளை மரக்கலங்கள் கொண்டு வந்து அதனை மேகம் போன்ற நிறமுடைய கடல் அலைகள் கரைமேல் உயர்த்துகின்ற சீகாழியில் எழுந்தருளியுள்ள கங்கை நதி பொருந்திய சடையையுடையவனே! நெற்றிக் கண்ணனே என்று இடைவிடாது அப்பெருமானது ஆயிரம் பெயர்களையும் பிதற்றப் பிணியானது தீரும்.

நீரார் சடையன் — கங்காதரன்; நெற்றிக்கண்ணன் — லலாடாக்ஷன். இம்மாதிரி பெயர்கள் ஆயிரக் கணக்கில்

இறைவனுக்கு உள்ளனவாகையால் பேராயிரமும் பிதற்ற என்றருளிச் செய்தார்.

பேராயிரம் — ஸஹஸ்ரநாமம். பிணி — நோய், துன்பம் முதலிய பொருள்கள். பிதற்றுதல் — பலமுறை சொல்லுதல் என்ற பொருளில் வந்தது.

வடிகொள் பொழிலின் மழலை வரிவண் டிசைசெய்யக்
கடிகொள் போதில் தென்றல் அணையுங் கலிக்காழி
முடிகொள் சடையாய் முதல்வா என்று முயன்றேத்தி
அடிகை தொழுவார்க் கில்லை அல்லல் அவலமே. 3

3. அழகுடைய பொழில்களில் வண்டுகள் மழலைமொழி போல இசைபாட, மணத்தினைக்கொண்ட மலர்களில் பட்டு வரும் தென்றல் காற்றானது வீசுகின்ற சீகாழிப்பதியில் வீற்றிருக்கும் சடை முடியுடையவனே! முதல்வனே! என்று முயற்சியுடன் ஏத்தித் திருவடிகளைக் கையால் தொழுபவர்களுக்கு அல்லல், அவலம் இவை இல்லையாம். (அல்லது அல்லலால் வரும் அவலம் இல்லை எனவுங்கொள்ளலாம்)

வடி — திருத்தம் (அழகு எனக் கொள்ளப்பட்டது)

மழலை — இளங்குழவிகள் பேசும் நிரம்பா மொழி.

முடிகொள் சடையாய் — ஜடாதரன் என்ற பெயர்.

அல்லல் — துன்பம். அவலம் — துயரம், கேடு, வறுமை, நோய், வருத்தம் முதலியன.

மனைக்கே ஏற வளஞ்செய் பவளம் வளர்முத்தங்
கனைக்குங் கடலுள் ஓதம் ஏறுங் கலிக்காழிப்
பனைக்கைப் பகட்டீர் உரியாய் பெரியா யெனப்பேணி
நினைக்க வல்ல அடியார் நெஞ்சில் நல்லாரே. 4

4. வளமை செய்யும் பவளம், வளர்கின்ற முத்துக்கள் இவைகளை மனைகளில் ஏறும்படிச் செய்து, ஒலிக்கும் கடலலைகள் மீண்டும் கடலுள் புகுகின்ற சீகாழியில் எழுந்தருளிய, பனைமரம்போலப் பருத்த துதிக்கையுடைய யானையின்

உரித்த தோலைப் போர்த்தியவனே! பெரியவனே (மஹா தேவனே) என ஆதரித்து தியானிக்கவல்ல அடியவர்கள் நல்ல நெஞ்சம் உடையவர்கள் ஆவார்.

மனை — வீடு; பவளத்தையும் முத்துக்களையும் கடல் அலைகள் வீடுகளில் ஏறும்படித் தள்ளுகின்றன என்பதாம்.

கனைக்கும் — ஒலிக்கும்; ஓதம் — கடல் அலை அல்லது பெருக்கெடுத்தோடும் நீர் வெள்ளம். பகடு — யானை.

பேணி — ஆதரித்து அல்லது விருப்பத்துடன்; நெஞ்சின் நல்லார் — நெஞ்சின் நன்மையையுடையவர், அதாவது நல்ல நெஞ்சம் படைத்தவர்கள் என்பதாம்.

பரிதி இயங்கும் பாரிற் சீரார் பணியாலே
கருதி விண்ணோர் மண்ணோர் விரும்புங் கலிக்காழிச்
சுருதி மறைநான் கான செம்மை தருவானைக்
கருதி எழுமின் வழுவா வண்ணந் துயர்போமே. 5

5. சூரியனது இயக்கத்தையுடைய இந்த நிலவுலகத்தில் சிறப்பு மிக்க பணிகளைச் செய்யக் கருதி மண்ணுலகத்தவர்களும் விண்ணுலகத்தவர்களும் ஒருங்கே விரும்புகின்ற சீகாழியில் எழுந்தருளிய, கேள்வியால் தொடர்ந்து வரும் நான்மறைகள் என்ற செம்மையை உலகிற்கு தருபவனான சிவபிரானை நினைந்து எழுவீர்களாக. உங்களது துயர்கள் சிறிதும் தவறாத வகையில் உங்களை விட்டு நீங்கி விடும்.

"நான்மறைக் கேள்வியான செம்மை தருவானை வழுவா வண்ணம் கருதி எழுமின் துயர்போம்" என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம்.

சுருதி — கேள்வி. (காதால் கேட்டு வாயினால் சொல்லி மனப்பாடம் செய்வது)

செம்மை — செம்பொருளான சிவத்தை அறியக் கருவியாதல் பற்றி நான்மறையாம் சுருதி செம்மை எனக்

கூறப்பட்டதாகக் கொள்க. வேதம் இறைவனது திருவாக் காதல் பற்றி செம்மை தருவானே எனக் கூறியருளியதாகக் கொள்க. வழுவுதல் — தவறுதல்.

மந்த மருவும் பொழிலில் எழிலார் மதுவுண்டு
கந்த மருவ வரிவண் டிசைசெய் கலிக்காழிப்
பந்த நீங்க அருளும் பரனே யெனவேத்திச்
சிந்தை செய்வார் செம்மை நீங்கா திருப்பாரே. 6

6. தென்றல் காற்று பொருந்துகின்ற அழகு நிறைந்த சோலையில், அதன் மணம் பொருந்தும்படி, வரிவண்டுகள் தேனைக் குடித்துவிட்டு இசைத்தலைச் செய்கின்ற ஒலிமிக்க சீகாழியில் எழுந்தருளியிருக்கும், பந்தம் நீங்க அருள் செய்யும் பரனே என்று துதித்துச் சிந்தை செய்பவர்கள் செம்பொருளாகிய சிவத்தினின்றும் நீங்காது இருப்பார்கள்.

எழில் — அழகு; பொழிலில் எழிலார் என்பதை எழிலார் பொழிலில் என மாற்றிப் பொருள் கொள்க. அங்ஙனமே கந்தம் மருவ என்பதையும் எழிலார் பொழிலில் கந்தம் மருவ என இணைத்துப் பொருள் கொள்க.

வரி — இச்சொல்லுக்கே வண்டு என்ற பொருள் உண்டு. இங்கு வரி வண்டு என்று கூறப்பட்டதால் வரியை யுடைய வண்டு என்று பொருள் கொள்ளப்பட்டது. வரி என்ற சொல் அழகு, நிறம், இரேகை என்பன போன்ற பொருள்களைத் தரும்.

பந்தம் — உறவு, கட்டு என்பன போன்ற பொருள் களைத் தரும் இச்சொல் யான், எனது என்ற அகப்புறப் பற்றுகளின் மேல் நின்றது. பற்றற்றானாகிய இறைவன் மீது பற்று கொண்டார்க்கே மற்றைய பற்றுகள் விடுமாகையாலும், அங்ஙனம் இறைவன் மீது பற்று கொள்வதும் அவனருளாலேயே நிகழ வேண்டியதாலும் 'பந்தம் நீங்க அருளும் பரனே என ஏத்திச் சிந்தை செய்வார்க்கே.........' எனக் கூறியருளினார் என்க,

பரன் — மேலானவன் "தனிமுதலாம் பரன்" (சேக்கிழார் கண்ணப்பநாயனார் புராணம் 140—ம் திருப்பாடல்).

செம்மை —செம்பொருள்; என்றும் உளதாய், தூயதாய் எக்காலத்தும் மாறுபாடின்றி ஒரே பெற்றியாயுள்ள சிவத்தின் தன்மையே செம்மை எனப்படும். அது ஆகு பெயராய் அத்தன்மையுடைய சிவபிரானைக் குறித்தது. எனவே செம்பொருளாம் சிவம் என்று பொருள் உரைக்கப்பட்டது. திருநின்ற செம்மை என்ற திருத்தொண்டத் தொகையும் காண்க. (7ம் திருமுறை 396ம் திருப்பாடல்) "சிவனெனு மோசை அல்லதறையோ உலகில் திருநின்ற செம்மையுளதே?" என்பது அப்பரடிகளின் திருவாக்கு (4ம் திருமுறை 8ம் பதிகம் 1ம் திருப்பாடல்).

புயலார் பூமி நாமம் ஓதிப் புகழ்மல்கக்
கயலார் கண்ணார் பண்ணார் ஒலிசெய் கலிக்காழிப்
பயில்வான் தன்னைப் பத்தி யாரத் தொழுதேத்த
முயல்வார் தம்மேல் வெம்மைக் கூற்றம் முடுகாதே 7

7. மேகம் நிறைந்த இந்த நிலவுலகத்து மக்கள் இறைவரது திருநாமங்களையெல்லாம் ஓதிப் புகழ் பெருக, மீன் போன்ற கண்களையுடைய பெண்கள் பண்ணிறைந்த இசையின் ஒலியைச் செய்கின்ற சீகாழிப் பதியில் உறைந்தருளும் சிவபிரானைப் பக்தி நிறைந்து வணங்கித் துதிக்க முயல்வார்கள்மேல் கொடிய இயமதருமன் முடுகுதலைச் செய்ய மாட்டான்.

பண்ணார்ஒலி — பண்ணொடு பொருந்திய இசை

முயல்வார் — முயற்சி செய்பவர்கள்.
முயல்வார் மீதே வெம்மைக் கூற்று முடுகாது எனின் முயன்றார் அதாவது வணங்கித் துதித்தலை விடாது செய்பவர்கள் மீது முடுகாமை கூறவும் வேண்டுமோ?

முடுகுதல் — விரைந்து பாய்தல், எதிர்த்தல்.

அரக்கன் முடிதோள் நெரிய அடர்த்தான் அடியார்க்குக்
கரக்க கில்லா தருள்செய் பெருமான் கலிக்காழிப்
பரக்கும் புகழான் தன்னை ஏத்திப் பணிவார்மேல்
பெருக்கும் இன்பம் துன்ப மான பிணிபோமே. 8

8. அரக்கனாகிய இராவணனது முடிகளும் தோள்களும் நெரியும்படி (தனது கால்விரலால்) நெருக்கினவனும், தனது அடியார்களுக்கு மறைக்க மாட்டாது அருள் செய்கின்ற பெருமானும் சீகாழியில் வீற்றிருந்தருளும் மேன்மேலும் விரிந்து பரவும் புகழையுடையவனுமான சிவபிரானைத் துதித்து வணங்குவார் மேல் இன்பம் பெருகும், துன்பத்தைத் தருவதாவ பிணிகள் யாவும் அகன்றுபோம்.

கரத்தல் — மறைத்தல்; இறைவனது மறைப்பு சக்தி திரோதானம் எனப்படும். கரக்ககில்லாதருள் செய்பெருமான் என்பதால் அடியவர்கள் பால் திரோதான சக்தி செயல்படாது அனுக்கிரஹ சக்தியே செயல்படும் என்று கூறியருளியதாகக் கொள்க.

மேலும் கரக்ககில்லாது என்பது பற்றித் திருத்தருமபுர ஆதீன உரைக் குறிப்பு கூறுவதாவது :

[கில் — ஆற்றலை உணர்த்துவது, சிவபெருமான் தன் அடியவர்க்கு அருளை மறைக்கும் ஆற்றல் இல்லாதவன் என்பதுணர்க. "குறைவிலா நிறைவு" எனப்படும் பரமேச்வரனுக்கும் தன் அடியார்க்கு இன்பங்கள் தருவதை மறைத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லாத ஒரு குறை உண்டு என்று உணர்த்திய நயம் போற்றத்தக்கது.]

குறிப்பு : இதில் நயம் யாதெனில் தன் அடியவர்களுக்கு மறைக்காது இன்பங்கள் தரும் இறைவனது பெருங்கருணையையே மறைக்கும் ஆற்றல் இல்லாதது போலக் கூறியதேயாகும்.

மாணாய் உலகங் கொண்ட மாலும் மலரோனுங்
காணா வண்ணம் எரியாய் நிமிர்ந்தான் கலிக்காழிப்
பூணார் முலையாள் பங்கத் தானைப் புகழ்ந்தேத்திக்
கோணா நெஞ்சம் உடையார்க் கில்லைக் குற்றமே. 9

9. வாமனனாய் (பலிச்சக்கரவர்த்தியிடம் மூவடி மண் இரந்து பின் பேருருவங்கொண்டு) உலகத்தை அளந்து கொண்ட திருமாலும், மலரில் உறைபவனான நான்முகனும் (அடிமுடி) காணாத வண்ணம் எரிப்பிழம்பாய் உயர்ந்தவனும், சீகாழியில் வீற்றிருந்தருளும் ஆபரணங்கள் பொருந்திய கொங்கைகளையுடைய உமாதேவியாரை ஒரு பங்கிலே கொண்டவனுமான சிவபெருமானைப் புகழ்ந்து துதித்துக் கோணுதல் இல்லாத நெஞ்சம் உடையவர்களுக்கு குற்றம் (என்பதே) இல்லை.

மாண் — மாணி, பிரமசாரி, இங்கு வாமனனாய் வந்த திருமாலைக் குறித்தது.

பூணார் முலையாள் — உமாதேவியார். மார்பில் அணியும் ஆபரணங்கள் கொங்கைகள் மேலும் பொருந்துதலால் பூணார் முலையாள் எனக்கூறியருளினார் போலும்.

கோணா நெஞ்சம் — கோணாத அதாவது கோணுதல் இல்லாத நெஞ்சம்.

கோணல் – 'கோணலே மாறுபாடுங் கூனுமாம் வளைவுமாமே' என்பது ணகரவெதுகை. (சூடாமணி நிகண்டு) எனவே மாறுபாடு இல்லாத நெஞ்சம் என்பது பொருள். நெஞ்சத்துக்கு கோணல் அதாவது மாறுபாடாவது யாது என்பதன் விரிவு "யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னுமிக் கோணை" என்பதாலும் இக் கோணலை நிமிர்த்தும் உபாயத்தை "ஞானவெரியால் வெதுப்பி நிமிர்த்துத்தான் செவ்வே நின்றிட..." என்பதாலும் அறிக. (சிவஞான சித்தியார் — பயனியல், 10-ம் சூத்திரம், 1-ம் அதிகரணம் 1-ம் திருவிருத்தம்)

அஞ்சி அல்லல் மொழிந்து திரிவார் அமணாதர்
கஞ்சி காலை உண்பார்க் கரியான் கலிக்காழித்
தஞ்ச மாய தலைவன் தன்னை நினைவார்கள்
துஞ்ச லில்லா நல்ல உலகம் பெறுவாரே. 10

10. அச்சத்துடன் துன்பந்தரும் பேச்சுக்களை கூறித் திரியும் சமணர்களாகிய அறிவிலிகளும், காலையில் கஞ்சி உண்ணும் வழக்கத்தை மேற்கொண்ட பௌத்தர்களாகிய அறிவிலிகளும் ஆகிய இருதிறத்தார்க்கும் அடைதற்கு அரியவனும், சீகாழியில் எழுந்தருளி துன்பம் அடைந்தோர்க்கெல்லாம் அபயம் அளித்துக் காத்தருளும் தலைவனுமாகிய சிவபெருமானைத் தியானிப்பவர்கள் சாதல் இல்லாத பேரின்ப உலகம் பெறுவார்கள். (பிறப்பிறப்பில்லாத பேரின்பம்துய்க்கும் இறைவனது உலகமடைவர் என்பதாம்)

அஞ்சி — தமது வார்த்தைகள் உண்மையிலேயே இன்பந்தரக் கூடியவையா அல்லவா என்ற ஐயத்தினால் ஏற்பட்ட அச்சம்.

ஆதர் — அறிவிலிகள்.

தஞ்சம் — அடைக்கலம். துன்ப வெம்மையால் வந்து அடைந்தவர்க்கெல்லாம் தண்மையுடையவராய் அபயம் அளிக்கும் பெருமான். சூரபன்மனுக்கு அஞ்சிய தேவர்கள் புகல் (சரண் அல்லது அடைக்கலம்) அடைந்த இடமாகையால் பெற்ற புகலி என்ற இத்தலத்து மற்றொரு பெயரும் இதனை விளக்கும்.

துஞ்சல் — சாதல்; நல்லவுலகம் — பேரின்பவுலகு.

ஊழி யாய பாரில் ஓங்கும் உயர்செல்வக்
காழி ஈசன் கழலே பேணுஞ் சம்பந்தன்
தாழும் மனத்தால் உரைத்த தமிழ்கள் இவைவல்லார்
வாழி நீங்கா வானோர் உலகில் மகிழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்


11. உக முடிவு ஆன காலத்து மண்ணுலகில் பிரளய வெள்ளத்தால் அழியாமல் மேல் மிதந்தோங்கிய உயர்ந்த செல்வத்தையுடைய சீகாழியில் கோயில் கொண்ட ஈசனது திருவடிகளையே வழிபடும் திருஞானசம்பந்தன் பணிதலையுடைய உள்ளத்தால் பாடிய தமிழ்ப்பாடல்களாகிய இவைகளை ஓத வல்லவர்கள், வாழ்தல் நீங்காது வானோருலகில் மகிழ்ந்திருப்பார்கள்.

ஊழி ஆய — யுகமுடிவு ஆன 'காலத்து' என்று ஒரு சொல் வருவித்து உரைக்கப்பட்டது.

ஈசன் கழலே பேணும் — கழலே என்பதில் உள்ள 'ஏ' காரத்தால் மற்ற எதனையும் திருஞானசம்பந்தர் வணங்கார் என்பது பெறப்பட்டது. இக்கருத்தையே சுந்தரர் தமது திருத்தொண்டத்தொகையில் "வம்பறு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்க் கொன்றையான் அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன்..." என்று அமைத்தருளியது கண்டு மகிழ்க.

தாழும் மனம் — பணிகின்ற உள்ளம். "...தாழ்வெனுந் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறவரிது." என சிவஞானசித்தியாரில் ஆளப்பட்டுள்ளது. (சிவஞான சித்தியார் சுபக்கம், பிரமாணவியல், 2ம் சூத்திரம், 4ம் அதிகரணம், வாழ்வெனும் மையல் விட்டு எனத்தொடங்கும் திருவிருத்தம்)

வாழி நீங்கா — வாழ்தல் நீங்காது.



சிவம்.

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

சீகாழி — 6

பண்: காந்தாரம்] திருச்சிற்றம்பலம் [2-ம் திருமுறை

விண்ணியங்குமதிக் கண்ணியான்விரி யுஞ்சடைப்
பெண்ண யங்கொள்திரு மேனியான்பெரு மானனற்
கண்ண யங்கொள்திரு நெற்றியான்கலிக் காழியுள்
மண்ண யங்கொள்மறை யாளரேத்துமலர்ப் பாதனே. 1

பதிகப் பொழிப்புரை: 1. ஆகாயத்தில் சஞ்சரிக்கும் சந்திரனைத் தலைமாலையாக அணிந்தவனும், விரிந்த சடையுடன் உமாதேவியாரை அழகாக (பாகத்தில்) கொண்ட திருமேனியுடையவனும், நெருப்புக் கண்ணைக் கொண்ட அழகிய நெற்றியையுடையவனும் (யாவனெனில்), மண்ணோர் நலமாகக் கொண்ட ஒலிமிக்க சீகாழியுள் மறையவர்கள் ஏத்தித் துதிக்கின்ற தாமரைமலர் போன்ற திருவடிகளையுடைய சிவபிரானே ஆவர்.

பெண் நயங்கொள் திருமேனியான் — அர்த்த நாரீச்வர மூர்த்தம்.

மண் நயங்கொள் என்பது மண்ணுலகத்தினர் நலம் தரும் தலம் எனக் கொள்ளுதலைக் குறித்தது.

வலிய காலனுயிர் வீட்டினான்மட வாளொடும்
பலிவி ரும்பியதொர் கையினான்பர மேட்டியான்
கலியை வென்றமறை யாளர்தங்கலிக் காழியுள்
நலிய வந்தவினை தீர்த்துகந்தஎந் நம்பனே. 2

2. வலிமையுடைய இயமனுடைய உயிரைப் போக்கினவனும், உமாதேவியாருடன் பிச்சையெடுத்தலை விரும்பிய கையினையுடையவனும், தனக்கு மேலானதொன்றில்லாத ஸ்தானத்தையுடைய முழுமுதற் கடவுளும் (யாவனெனில்)

(தமது எரியோம்புதல் தொழிலால்) வறுமை முதலிய துன்பங்கள் உலகிற்கு வாராது தடுத்தலில் வெற்றியடைந்த மறையாளர்கள் வாழ்கின்ற சீகாழியுள் எழுந்தருளியிருந்து துன்புறுத்த வந்த கொடிய வினைகளையெல்லாம் தீர்த்து உயர்ந்த எமது நம்பனாகிய சிவபிரானேயாவர்.

மடவாள் — இங்கு உமாதேவியாரைக் குறித்தது.

பரமேட்டி — தமிழ்மாலை- 12, 61-ம் பக்கத்தில் கூறிய பொருளையும் நினைவு கூர்க.

கலி — துன்பம்; கலியுகத்தில் வரும் பாவம் எனவும் கொள்க.

கலியை வென்ற மறையாளர் — 'கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்' என்று கோயில் பதிகத்தில் அருளிச் செய்ததும் காண்க. தமிழ்மாலை-4, பக்கம் 51-52ல் உரைக்கப்பட்டவையும் இங்கு நினைவு கொள்ளுதற்குரியது).

உகந்த—உயர்ந்த; நம்பன் —விருப்பத்திற்குரியவன்.

சுற்ற லாநற்புலித் தோலசைத்தயன் வெண்டலைத்
துற்ற லாயதொரு கொள்கையான்சுடு நீற்றினான்
கற்றல் கேட்டலுடை யார்கள்வாழ்கலிக் காழியுள்
மற்ற யங்குதிரள் தோளெம்மைந்தனவன் நல்லனே. 3

3. அரையில் சுற்றி உடுத்தற்கு ஆகின்ற அழகிய புலித் தோலைக்கட்டி, பிரமதேவனது வெள்ளிய தலையில் உண்ணலாகிய ஒரு கொள்கையை உடையவனும், சுடப்பட்ட நீற்றினை அணிந்தவனும், கற்றலும் கேட்டலும் உடையார்களாகிய பெரியோர்கள் வாழ்கின்ற சீகாழியில் எழுந்தருளிய வலிமை விளங்குகின்ற வீரனுமான சிவபிரானே நன்மையைச் செய்பவராவர்.

சுற்றல் — அரையில் சுற்றுதல் அதாவது உடுத்தல். அசைத்து — கட்டி, துற்றல் — உண்ணுதல்.

சுடுநீறு — மஹாசங்கார காலத்தில் அனைத்துலகையும் அழித்துப் பொடித்த பொடி.

மல் — வலிமை; தயங்குதல் — ஒளிசெய்தல், விளங்குதல் மைந்தன் — வலிமையுடையவன், வீரன்.

நல்லன் — நல்லவன் அதாவது நன்மை செய்பவன் (சங்கரன்).

பல்ல யங்குதலை யேந்திநன்படு கானிடை
மல்ல யங்குதிரள் தோள்களாரநட மாடியுங்
கல்ல யங்குதிரை சூழநீள்கலிக் காழியுள்
தொல்ல யங்குபுகழ் பேணநின்றசுடர் வண்ணனே. 4

4. பற்கள் நிலைகுலைந்த தலையோட்டினை ஏந்தியவனும், அடர்ந்த கானகத்திடை வலிமையால் அசைந்த தோள்களார நடனமாடினவனும் (யாவனெனில்) கற்களில் அசங்கிய அலைகளைக்கொண்ட நீண்ட கடல் சூழ சீகாழியில் தொன்மையான பரவிய புகழ்மாலைகளை (அடியவர்கள்) விரும்பிப் போற்றுதல் செய்யும்படி எழுந்தருளிய சுடர் வண்ணனாகிய சிவபெருமானேயாவர்.

அயங்கு — அசங்குதல் அதாவது நிலைகுலைதல் என்று பொருள். ஒவ்வொரு அடியிலும் அவ்விடத்துக்குப் பொருந்தும் முறையில் பொருள் கொள்ளப்பட்டது.

கல் அயங்கு திரை — கற்களில் அசங்கிய திரை அதாவது கடற்கரையில் உள்ள கற்பாறைகளில் மோதித் திரும்பும் அலைகள்.

திரை — அலை, கடல் என்ற இருபொருளும் தரும். மேலும் திரை என்ற சொல்லுக்கு ஆறு (River) என்ற பொருளும் உள்ளமையால் ஆறு சூழ் கலிக்காழி என்றும் கொள்ளலாம்.

நடமாடி — நடனம் ஆடுபவன். தொல்லயங்கு புகழ் — தொல்புகழ், அயங்கு புகழ் என ஈரிடத்தும் கூட்டிப் பொருள் கொள்ள நின்றது.

பேண நின்ற — விருப்பித்துதிக்கும்படி எழுந்தருளியிருந்த.

சுடர் வண்ணன் — அழல் அதாவது தீயின் நிறமுடையவன். சுடர் என்ற சொல் அக்கினி, ஒளி, சூரியன், சந்திரன், தீச்சிகை, விளக்கு என்பன போன்ற பொருள்களைத் தரும்.

தூந யங்கொள்திரு மேனியிற்பொடிப் பூசிப்போய்
நாந யங்கொள்மறை யோதிமாதொரு பாகமாக்
கான யங்கொள்புனல் வாசமார்கலிக் காழியுள்
தேன யங்கொள்முடி ஆனைந்தாடிய செல்வனே. 5

5. புனிதமும் அழகும் கொண்ட திருமேனியில் பொடியான திருநீற்றினைப் பூசிப் போய் நாவினது நற்பயனைக் கொண்ட வேதத்தினை ஓதி மாதினை ஒரு பாகமாகக் கொண்டு, கானகத்தின் நலன்களைக் கொண்ட மணம் நிறைந்த புனல் சூழ்ந்த சீகாழியுள் தேனின் நலத்தைக் கொள்கின்ற திருமுடியில் பசுக்களினின்றும் கிடைக்கும் பால், தயிர், நெய் இவற்றின் அபிடேகத்தைக் கொண்ட செல்வனாகிய சிவபிரான் (எழுந்தருளியுள்ளார்). (அவரை வழிபட்டு உய்யுங்கள் என்று கூறியருளியதாகக் கொள்க.)

தூ — பரிசுத்தம். நயம் — மகிழ்ச்சி, இன்பம், நன்மை, பயன் முதலிய பொருள்களைத்தரும் சொல்.

நா நயங்கொள் மறை — நாவினது பயன் மறை ஓதுதலே என்பதைக் குறிப்பிட்டருளியதாகக் கொள்க.

கான் நயம் — காட்டின் நன்மை. அதாவது ஆற்று நீர் பெருக்கெடுத்து ஓடும் போது கானகத்து சந்தனம், அகில் முதலிய கட்டைகளையும், மற்றும் மலர்களையும் அடித்துக் கொணருதலாம்.

வாசமார் புனல் — சந்தனம், அகில், மலர் முதலியவைகளில் சேர்க்கையால் ஏற்படும் மணம்.

தேன் நயங்கொள் — தேனினுல் ஏற்படும் பயன். அதாவது தேன் அபிடேகம்.

செல்வன் — ஸர்வைசிவர்ய ஸம்பன்ன: சம்பு: என்பது உபநிடதவாக்கு. ''ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்' என்பது அப்பரடிகளின் திருவாக்கு.

சுழியி லங்கும்புனற் கங்கையாள்சடை யாகவே
மொழியி லங்கும்மட மங்கைபாகம் உகந்தவன்
கழியி லங்குங்கடல் சூழுந்தண்கலிக் காழியுள்
பழியி லங்குந்துய ரொன்றிலாப்பர மேட்டியே. 6

6. நீர்ச்சுழிகள் விளங்குகின்ற நீராகிய கங்கைநதி தனது சடையில் இருக்கவும், இனிய மொழி விளங்குகின்ற உமாதேவியாரை ஒரு பாகமாக வைத்து மகிழ்ந்தவன் (யாவனெனில்) உப்பளங்கள் விளங்குகின்ற கடல் சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய சீகாழியுள் எழுந்தருளிய பழியினுல் விளங்கும் துயரம்ஒரு சிறிதுமில்லாத பரமேட்டியான சிவ பிரானேயாவர்.

பழி — நிந்தை, இதனுல் உண்டாவது துயரம் ஆகலின் பழி இலங்கும் துயர் என்றருளிச்செய்தனர். 'பழியிலங்குந் துயர் ஒன்றிலா' என்பதைப் 'பரமேட்டி'க்கு விசேடண மாக்காது, கடல் சூழும், பழியிலங்கு துயரொன்றிலாத் தண் கலிக்காழி' என்று சீகாழிக்கு விசேடணமாகக் கொள்ளு தலும் பொருந்தும். சீகாழிப்பதியில் பழியும் அதனுல் உண்டாகும் துயரமும் இல்லை என்று கூறியருளியதாக அமையும்.

முடியி லங்கும்உயர் சிந்தையான்முனி வர்தொழ
அடியி லங்குங்கழ லார்க்கவேயன லேந்தியுங்
கடியி லங்கும்பொழில் சூழுந்தண்கலிக் காழியுள்
கொடியி லங்கும்இடை யாளொடுங்குடி கொண்டதே 7

7. திருமுடி விளங்குகின்ற, உயர்ந்த சிந்தையை உடைய வனுகிய பெருமான் முனிவர்கள் தொழுதலைச்செய்யவும்,

திருவடியிலே பிரகாசிக்கும் வீரக்கழல்கள் ஒலி செய்யவும், திருக்கரத்தில் அனல் ஏந்தியும், மணம் வீசுகின்ற பொழில்கள் சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய சீகாழியுள் கொடிபோலும் திகழும் மெல்லிய இடையினையுடைய உமாதேவியாருடன் எழுந்தருளியுள்ளார். (உலகத்தவர் வழிபட்டுப் பயன் பெறுவீர் என்றதாம்). (அல்லது அடியவர் வழிபட்டு உய்யும் பொருட்டுக் கலிக்காழியுள் குடிகொண்டதோ என்று வினவாக்கி உரைத்தலுமாம்).

இலங்குதல் — விளங்குதல்.

கொடி இலங்கும் இடை—கொடியின் தன்மை விளங்கும் இடை. பெண்களின் இடைக்குக் கொடியை உவமிப்பது கவி மரபு. மின்னற்கொடி என்றுங் கொள்ளலாம்.

வல்ல ரக்கன்வரை பேர்க்கவந்தவன் தோள்முடி
கல்ல ரக்கிவ்விறல் வாட்டினான்கலிக் காழியுள்
நல்லொ ருக்கியதொர் சிந்தையார்மலர் தூவவே
தொல்லி ருக்கும்மறை யேத்துகந்துடன் வாழுமே 8

8. வலிமையுடைய அரக்கனும், திருக்கயிலைமலையைப் பெயர்க்க வந்தவனுமான இராவணனது தோள்களும் முடிகளும் மலையில் நசுங்கச் செய்து அவனது வலிமையைப் போக்கினவனாகிய சிவபெருமான் சீகாழிப்பதியில் ஒருமைப்பட்ட நல்ல சிந்தையுடன் கூடியவர்கள் மலர்களைத் தூவி வழிபட தொன்மையாக இருக்கும் வேதத் துதிகளை விரும்பி உமாதேவியாருடன் எழுந்தருளியுள்ளார்.

கல் — மலை; அரக்குதல் — அரைத்தல் (நசுக்குதல்), அழித்தல் முதலிய பொருள்கள்.

சிந்தை ஒருக்குதல் — மனதைச் சிவபிரானது திருவடியிலேயே நிலைபெறச் செய்தல், அம்மாதிரி மனம் இறைவனது திருவடிகளில் நிலைபெற்று இருக்கும் நிலையே பக்தி எனப்படும். அத்தகைய சிந்தையுடையவர்களே அடியார்கள்

எனப்படுவர். எனவே அடியவர்கள் மலர் தூவி வழிபட, வேதத் துதிகளைச் சொல்ல அவற்றை விரும்பி ஏற்றுக் கொண்டு சீகாழிப்பதியுள் இறைவர் உமாதேவியாரொடு உலகிற்குத் திருவருள்புரிய எழுந்தருளியுள்ளார். உலகத்தீரே! சீகாழி செல்லுங்கள், பெரியநாயகியுடன் திருக்கோலங்காட்டும் தோணியப்பரை வழிபட்டு உய்தி பெறுங்கள் என்பதை ஆசாரியமூர்த்திகளது உபதேசமாகக் கொள்க.

இருக்கும் மறை — என்றும் மறையாது, மாறுபாடடையாது ஒரேபடித்தாய் விளங்கும் நான்மறைகளை.

உடன் வாழும் என்றதால் உமையம்மையுடன் வாழும் என்று பொருள் உரைக்கப்பட்டது.

மருவு நான்மறை யோனுமாமணி வண்ணனும்
இருவர் கூடியிசைந் தேத்தவேயெரி யான்றனூர்
வெருவ நின்றதிரை யோதம்வார்வியன் முத்தவை
கருவை யார்வயற் சங்குசேர்கலிக் காழியே. 9

9. பொருந்திய நான்கு வேதங்களையும் (சிவபிரான் திருவருளால் உணர்ந்து) ஓதுபவனாகிய பிரமதேவனும், நீலமணியின் வண்ணத்தினனாகிய திருமாலும் ஆகிய இருவர் ஒன்று சேர்ந்து துதிக்கும்படி தீப்பிழம்பாய் நின்றவனது ஊர்(யாதெனில்) அச்சந்தரும்படி நின்ற கடலின் அலைகளால் அகன்று பரவிய முத்துக்களும் மற்றும் சங்குகளும் கரிய வைக்கோல் நிறைந்த வயல்களில் சேர்கின்ற சீகாழியாகும்.

இருவர் கூடி இசைந்தேத்தவே — நான்முகனும் திருமாலும் முதலில் தனித்தனி புள்ளாயும் விலங்காயும் முறையே திருமுடியையும் திருவடியையும் காண்போம் என்று சென்று காண இயலாதாராகிப் பின்னர் இருவரும் தமது பிழையையும் ஆற்றற்குறைவையும் உணர்ந்து ஒன்று கூடித் துதிக்க இறைவர் வெளிப்பட்டு அருள் செய்தனர்

என்ற கந்தபுராண வரலாற்றை உள்ளடக்கி இங்ஙனம் அருளிச் செய்துள்ளதாகக் கொள்க.

கருவை — கரிய வைக்கோல்; வரகு வைக்கோல் என்ற பொருள் காணப்படுகிறது. கருவேலமரம் என்ற பொருள் தருமையாதீனக் குறிப்புரையில் உள்ளது. அங்ஙனமாயின் கருவேல மரங்கள் சூழ்ந்த வயல்கள் எனக் கொள்ளலாம்.

நன்றி யொன்றுமுண ராதவன்சமண் சாக்கியர்
அன்றி யங்கவர் சொன்னசொல்லவை கொள்கிலான்
கன்று மேதியிளங் கானல்வாழ்கலிக் காழியுள்
வென்றி சேர்வியன் கோயில்கொண்டவிடை யாளனே. 10

10. நன்மை ஒன்றும் அறியாத கொடிய சமணர், சாக்கியர் ஆகியவர்கள் பகைமையுடன் கூடி சொன்ன சொற்களை ஒரு பொருளாகக் கொள்ளாதவன் (யாவனெனில்) கடற்கரைச் சோலைகளில் இளங்கன்றுகளும் எருமைகளும் வாழ்கின்ற சீகாழியில் வெற்றி பொருந்திய பெரிய கோயிலைத் தமது இடமாகக் கொண்ட எருதை வாகனமாகக் கொள்பவனாகிய சிவபிரானேயாவர்.

அன்றி — பகைத்து; கானல் — கடற்கரைச் சோலை, விடையாளன் — விடையை (வூர்தியாக) ஆள்பவன்.

எருமைகள், கன்றுகள் போலவே சமணசாக்கியர் வாழ்வது அவர் பேசுவது எனக் கொண்டு அவரை ஒரு பொருட்டாகக் கருதாது இறைவர் எழுந்தருளியுள்ளார் என்பது தொனிப் பொருளாகக் கொள்ளினும் அமையும்.

கண்ணும் மூன்றுமுடை யாதிவாழ்கலிக் காழியுள்
அண்ண லந்தண்ணருள் பேணிஞானசம் பந்தன்சொல்
வண்ணம் மூன்றுந்தமி ழில்தெரிந்திசை பாடுவார்
விண்ணும் மண்ணும்விரி கின்றதொல்புக ழாளரே. 11

திருச்சிற்றம்பலம்,

11 மூன்று கண்களையுடைய முதல்வனாகிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் சீகாழியுள் அண்ணலாகிய அப்பெருமானின் குளிர்ந்த திருவருளைப் போற்றிய திருஞானசம்பந்தனது சொற்களாகிய தமிழ்ப்பதிகத்தை மூன்று விதமான வண்ணமும் தெரிந்து இசையாகப்பாடுபவர்கள் விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் விரிந்து பரவிய தொன்மையான புகழையுடையவர்களாக ஆவார்கள்.

மூன்று வண்ணம் — மெலிவு, சமன், வலிவு என்ற மூன்று வண்ணம். இசைபாடுவார் இவை மூன்றும் தெரிந்து பாடுதல் வேண்டும். வடமொழி வேதம் ஓதுவோர் குரலை உயர்த்தியும், தாழ்த்தியும், சமனாக்கியும் இசைப்பதைக் காணலாம். தமிழ் வேதமாகிய இப்பதிகங்களும் அம் மாதிரியே இசைக்கப்பட வேண்டும் என்பதாம்.

சிவம்.

(56-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பாடல் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

சிவம்

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

திருப்பாடல் முதற்குறிப்பகராதி

(தொடர்ச்சி 55-ம் பக்கம்)

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் அருளியது

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்



யத்யத் கர்ம கரோமி
தத்ததகிலம்
சம்போ தவாராதனம்

மொழிக்கு மொழி தித்திக்கும்

மூவர் தமிழ் மாலை

(சம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிக வெளியீடு)

பன்னிரு திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளான தேவாரத் திருப்பதிகங்களை பொழிப்புரை, விசேடவுரை, பதிக வரலாறு, தலவரலாறு, புராணவரலாறு முதலிய உரை விசேடங்களுடன் 108 தமிழ் மாலைகளாகப் பிரசுரித்துச் சிவபெருமானின் 108 திருநாமங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தமிழ் மாலையாகச் சமர்ப்பிக்கும் இந்த திட்டத்தில் இதுவரை 14 தமிழ் மாலைகள் வெளிவந்துள்ளன.

விலை விவரம் :

முதல் ஆறு மாலைகள் ஒவ்வொன்றும்	...	2-00
ஆறு தமிழ்மாலைகளும் சேர்த்து	...	10-00
7-வது தமிழ் மாலை முதல் ஒவ்வொரு தமிழ் மாலையும்	...	3-00
ஒவ்வொரு ஆறு தமிழ் மால்களும்	...	15-00
1 முதல் 108 தமிழ் மாலைகளுக்கும் முன்பண உதவிச் சலுகை விலை	...	158-00

சலுகை விலை முன்பணமாகச் செலுத்தப்பட வேண்டும். ஒரு ஆண்டுக்குள் தவணைகளாகவும் செலுத்தலாம்.

முன்பணம் இடைத்தவுடன் இதுவரை பிரசுரமான தமிழ் மாலைகள் உடனடியாக அனுப்பப்பட்டு மற்றவை பிரசுரமானதும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும்.

உரையாசிரியர்—பதிப்பாசிரியர்

ஆங்கிரஸ S. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,

மேலமாம்பலம், சென்னை-600033.